983

# குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ.கே.செட்டியார்

11

மலர் ~~12~~ தமிழ்மணி இதழ் 6

ஜய—புரட்டாசி

# உள்ளுறை

பக்கம்

1. இட்ட பணி
—ஏ. கே. செட்டியார் 3

2. பாணிக்கிரகணமும் பரசுராம பங்கமும்
—ஜ. ராஜகோபாலன் 17

3. தாவரப் பாதுகாப்பு 28

4. சிவபெருமானின் ஆபரணங்கள்
—லி. சண்முகசுந்தரம் 35

5. மனித உரிமையைக் காக்கும் சட்டம் 39


6. கொடுத்த பணம்
—"உதயன்" 43

7. தொழில் பெருக அணுசக்தி 51

8. பாஞ்சாலப் பழங்கதைகள்
—ஷம்ஷீர் சிங் நருலா 54

.9 பெனிசிலின்
—எஸ். எஸ். ராமசாமி 66

10. டாக்டர் சுகர்னோ 77



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# இட்ட பணி


ஏ. கே. செட்டியார்

மேற்கிந்தியத் தீவுகளில் முக்கியமானது டிரினிடாட். இத்தீவின் தலைநகரம் போர்ட் – ஆப் – ஸ்பெய்ன். இந் நகரில், இந்திய அரசாங்கப் பிரதிநிதியாக இருந்த ஸ்ரீ ஆனந்த மோகன் ஷகாயின் விருந்தினனாகச் சில காலம் தங்கியிருந்தேன்.

அருபா என்பது டிரினிடாடிலிருந்து சுமார் முன்னூறு மைல் தூரத்திலுள்ள சிறு தீவு. ஜனத்தொகை ஐயாயிரத்துக்குள்தான் இருக்கும். அங்குள்ள இந்தியரின் தொகை சுமார் அறுபது. இவர்கள் எல்லோரும், டச்சு கயானா, பிரிட்டிஷ் கயானா, டிரினிடாட் முதலிய இடங்களிலிருந்து அருபாவுக்கு உத்தியோகத்துக்கும் வியாபாரத்துக்கும் சென்றவர்கள்.

அருபா, டச்சு மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்று. இங்கே கல் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் இருக்கிறது. செல்வம் கொழிக்கும் சிறு தீவுகளில் இதுவும் ஒன்று. வருமானத்துக்கு ஏற்றாற்போல வாழ்க்கைச் செலவும் மிக அதிகம்.

டிரினிடாடிலிருந்து அருபாவுக்கு வாரத்துக்கு மூன்று நாள் விமானம் செல்லும். குறிப்பிட்ட மாதம் 17 ந் தேதியன்று அருபா வழியாகப் பனமா செல்லத் திட்டமிட்டிருந்தேன். அருபாவில் உள்ள இந்திய சமூகத்தினர்



திருவண்ணாமலை

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி

கோயமுத்தூர்

எனது வருகையை எதிர்பார்த்து, முன் கூட்டியே பல ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

எதிர்பாராத அசௌகரியங்களால் பஞுமா செல்ல இயலவில்லை. எனவே அருபாவுக்கு வர இயலவில்லை என்று எழுதிவிட்டேன்.

16 ந் தேதி மாலை நாலரை மணிக்கு அருபாவிலிருந்து ஒரு தந்தி கிடைத்தது. "அவசியம் நாளை அருபாவுக்கு வாருங்கள். தங்களுக்கு வர சௌகரிய மில்லையாளுல், படத்தைத் தவருமல் அனுப்புங்கள்" என்பது தந்தியின் வாசகம். மறுநாள் காலை ஏழு மணிக்கு விமானம்.

அடுத்த வீட்டில், இந்திய அரசாங்கத்தின் முதல் காரியதரிசியான ஸ்ரீ ஜெயபால் வசித்தார். அவர் தஞ்சாவூரில் பிறந்த தமிழர். பர்மாவில் கல்வி பயின்றவர். தற்பொழுது ஐக்கிய நாடுகள் சபைக் குழு ஒன்றின் அங்கத்தினராக ஆப்பிரிக்கா சென்றிருக்கிருர்.

ஸ்ரீ ஜெயபால், படத்தை அனுப்பு முன் சுங்க அதிகாரிகள் அனுமதி வேண்டுமென்றும், சுங்கக் காரியாலயம் ஐந்து மணிக்கு மூடி விடுவார்கள் என்றும் எனவே நாளை படத்தை அனுப்புவது இயலாத காரியம் என்றும் கூறினர்.

வெளியூர் சென்றிருந்த ஸ்ரீ ஷகாய் இரவு எட்டு மணிக்குத் திரும்பினர். அவரிடம் தந்தியைக் காண்பித்தேன். "காலை ஏழு மணிக்கு விமானம். சுங்க அதிகாரி அனுமதியின்றி அனுப்ப இயலாது. ஆகையால் இதை மறந்து விடு" என்று கூறினர்.

அன்றிரவு எங்கள் அனைவருக்கும் ஸ்ரீ ஜெயபால் வீட்டில் விருந்து. சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது, ஸ்ரீ ஷகாய்க்கு ஒரு தந்தி வந்தது.


அருணகிரிவிலாஸ்
சீயக்காய்பவுடர்
N. ஆறுமுகம் பிள்ளை,
காரைக்குடி.
B.S

"செட்டியார் வருவார் என்று கருதி எல்லா ஏற்பாடு களும் செய்தோம். இத் தீவிலுள்ள முக்கியஸ்தர்கள் அனை வருக்கும் அழைப்பு அனுப்பியுள்ளோம். எப்படியாவது நாளை காலை விமானத்தில் படத்தை அனுப்புங்கள். நாளை படம் காட்டாவிட்டால், அரூபாவிலுள்ள இந்திய சமூகத் தினரின் கௌரவத்துக்குப் பங்கம் உண்டாகும்" என்பது தந்தியின் வாசகம்.

"இப்படம் எப்படியும் நாளை காலை விமானத்தில் செல்ல வேண்டும்" என்றார் ஸ்ரீ ஷகாய்.

"சுங்க அதிகாரியின் அனுமதியில்லாமல் எப்படிப் படத்தை அனுப்புவது?" என்றேன்.

"இப்பொழுது, இந்திய அரசாங்கப் பிரதிநிதி என்ற முறையில் இப்படத்தை நாளை காலை விமானத்தில் அனுப் புவது என் கடமை. அரூபாவில் உள்ள இந்திய சமூகத் தினரைக் கைவிடக்கூடாது" என்றார் ஸ்ரீ ஷகாய்.

ஸ்ரீ ஜெயபாலுக்குச் சாப்பாட்டின்மீது கவனம் செல்லவில்லை. உடனே விமானக் கம்பெனிக்கு டெலி போன் செய்தார். பதிலே இல்லை.

ஸ்ரீ ஜெயபால் சொல்ல, இரண்டு கடிதங்களின் வாச கங்களை எழுதிக் கொண்டேன்.

இக் கடிதங்களில் ஒன்று விமான நிலையத்திலுள்ள சுங்க அதிகாரிக்கு. படத்தைத் தடையின்றி அனுப்ப உதவும் படியும், மற்ற சடங்குகளை மறுநாள் காரியாலயம் திறந்த பின்னர் பூர்த்தி செய்துகொள்வதாகவும் கண் டிருந்தது.

மற்றொரு கடிதம், விமானக் கம்பெனி அதிகாரிக்கு. படத்தை அவசியம் மறுநாள் காலை விமானத்தில் அனுப்ப உதவி செய்யும்படிக் கண்டிருந்தது.

உடனே ஸ்ரீ ஷகாய் வீட்டுக்கு வந்து இரண்டு கடிதங்களையும் 'டைப்' செய்தேன். அதில் கையெழுத்திட்ட பின்னர்தான், ஸ்ரீ ஷகாய் படுக்கச் சென்றார்.

* * * *

போர்ட் ஆப் ஸ்பெயின் நகரிலிருந்து பியார்க்கோ விமான நிலையம் சுமார் பதினான்கு மைல். நகரத்திலிருக்கும் விமானக் கம்பெனியாரின் காரியாலயத்துக்குக் காலை ஐந்து மணிக்கெல்லாம் என்னைக் கொண்டு போய்விடும்படி, ஸ்ரீ ஷகாயின் வேலையாளான தூர்க்காவிடம் கூறினேன். அவனும் அவ்வாறே செய்தான். ஆனால் விமானக் கம்பெனியாரின் காரியாலயம் இன்னும் திறக்கப்பெற வில்லை என்றும்,சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் திறந்துவிடுவார்கள் என்றும், கம்பெனியாரின் பஸ்ஸில் விமான நிலயத்துக்குச் செல்லுவதாகவும், எனவே கார் தேவையில்லை என்றும் கூறித் தூர்க்காவைத் திருப்பி அனுப்பிவிட்டேன்.

'காலை ஆறு மணிவரை காத்திருந்தேன். கதவு திறக்கவில்லை. தட்டினாலும் பதில் இல்லை. டெலிபோன் செய்வதற்கும் அருகில் அந்நேரத்தில் வசதி ஒன்றுமில்லை. ஆறு மணி ஐந்து நிமிஷத்துக் கெல்லாம், ஒரு வேளையாள் கதவைத் திறந்தார்.

"விமான நிலயத்துக்கு எப்பொழுது பஸ் செல்லும்?" என்று கேட்டேன்.

"நாலே முக்கால் மணிக்கே போய் விட்டார்களே?" என்றார் அவர்.

வாடகை மோட்டார் நிற்கும் நிலயத்துக்குச் செல்ல வேண்டுமானால் அரைமைல் நடக்க வேண்டும். கையில் இருக்கும் பார்சலும் கனமானது.

நல்ல வேளையாக ஒரு வாடகை மோட்டார் அவ் வழியே சென்றது. விமான நிலயத்துக்கு உடனே செல்ல வேண்டுமென்று கூறினேன். நியாயமாகச் சென்று வரு வதற்குள்ள வாடகையும், எனது அவசரத்துக்காக அதைப் போல மற்ெறாரு பங்கு வாடகையும் கேட்டார் அந்த வாடகை மோட்டார் ஓட்டுபவர். கொடுக்கத் தயாராக இருந்தேன். ஆனால் கார் மிகப் பழையது; குறித்த காலத்தில் போய்ச் சேருமா என்ற சந்தேகம் உண்டாகிவிட்டது. எனவே, நேராக ஸ்ரீ ஷகாய் வீட்டுக்குச் செல்லும்படிக் கூறினேன். ஐந்து நிமிஷத்தில் அங்கு போய்ச்சேர்ந்தேன். இரட்டிப்பு வாடகைகொடுத்து, வாடகை மோட்டாரைப் போகச் சொல்லிவிட்டேன்.

துர்க்கா என்னைப் பார்த்ததும் "உங்களுக்கு பஸ் தவறி விட்டது என்று நினைக்கிறேன். இதோ கார் கொண்டு வருகிறேன். எப்படியும் விமானத்தைப் பிடித்து விடலாம்" என்று உற்சாகத்தோடு கூறினர்.

ஸ்ரீ ஷகாயின் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது 6–22 ஆகிவிட்டது. 6–45க்கு எல்லாம் விமான நிலயம் போய்ச் சேர்ந்தோம்.

விமானக் கம்பெனியின் அதிகாரி பிரயாணிகளின் பெயர்களை எல்லாம் 'டைப்' செய்து கொண்டிருந்தார். குமஸ்தா பிரயாண சம்பந்தமான மற்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தார். பிரயாணிகளின் சாமான்களைச் சுங்க அதிகாரி சோதித்து முடிந்தவுடன், கூலியாட்கள் அவை களை விமானத்துக்கு எடுத்துச் சென்றனர்.

பியார்கோ, சர்வதேச விமான நிலயம். வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இவ்வழியாக செல்லும் விமானங்கள் எல்லாம் இங்கு இறங்கித்தான் செல்லவேண்டும். நூற்றுக் கணக்கான மக்கள் இங்கே

வேலை செய்கின்றனர். பல நாடுகளைச் சேர்ந்த ஏராள மான விமானங்கள் இங்கு வரும். சில சமயங்களில், சென்னை செண்ட்ரல் ஸ்டேஷன்போல அவ்வளவு பரபரப்பும் சுறுசுறுப்பும் காணப்படும்.

விமானக் கம்பெனியின் குமஸ்தாவின் முன்னால் பார்சலை வைத்தேன். அவர் ஒரு போர்த்துகீசியர் மாதிரி காணப்பட்டார்; அல்லது அவர் ஒரு 'முலோட்டோ' வாக இருக்க வேண்டும். நமது நாட்டில் 'ஆங்கிலோ இந்தியர்' என்பது போல, அந் நாட்டில் 'முலோட்டோ' என்பது. விமானக் கம்பெனியின் அதிகாரியும் ஒரு 'முலோட்டோ' என்றே தோன்றியது.

குமஸ்தா என்னை அலட்சியமாகப் பார்த்தார். "இந்தப் பார்சல் இன்று போகாது. ஏன் நேரம் கழித்து வந்தீர்கள்?" என்றார்.

மிகவும் விநயமாக அவரிடம் விஷயங்களைக் கூறினேன். முதல் நாள் இரவு டெலிபோன் செய்தபோது அதற்குப் பதில் இல்லை என்றும், எப்படியாவது இப் பார்சல் அன்று செல்லவேண்டும் என்றும் மன்றாடினேன்.

"இந்தப் பார்சலை இன்று அனுப்புவதானால், விமானம் ஐந்து நிமிஷம் தாமதிக்கவேண்டும். அவ்வாறு தாமதித்தால் இருபது டாலர் நஷ்டமாகும். அத் தொகையைத் தாங்கள் தருவீர்களா?" என்று என்னைக் கேட்டவாறே தமது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

உடனே, இருபது டாலர் நோட்டை அவர் முன்னால் வைத்தேன். (டிரினிடாடில் ஒரு டாலர் சுமார் மூன்று ரூபாய்)

அவருக்கு இது ஆச்சரியத்தைக் கொடுத்தது. சிறிது புன் முறுவல் பூத்தார். ஆனால் பார்சலை அனுப்ப முடியா

தென்று பிடிவாதமாகக் கூறினர். பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அச்சமயம் அங்கு நின்றுகொண்டிருந்த சுங்க அதிகாரியை அணுகி, ஸ்ரீ ஷகாயின் கடிதத்தைக் கொடுத்தேன். சுங்க அதிகாரி ஓர் இந்தியர். கடிதத்தை வாசித்ததும் மிகவும் அன்பாக, "நிச்சயமாக அனுமதிக்கிறேன். பார்சல் எங்கிருக்கிறது? அதைத் திறந்து காட்டுங்கள்" என்ருர்.

குமஸ்தாவின் முன்னிலையில் இருந்த பார்சலை, சுங்க அதிகாரிக்குத் திறந்து காட்ட முன்வந்தேன்.

அப்பொழுது அந்தக் குமஸ்தா, சுங்க அதிகாரியைப் பார்த்து,"ஏன் வீணுகக் காலத்தைச் செலவு செய்கிறீர்கள். இந்தப் பார்சல் இன்று விமானத்தில் போகாது" என்ருர்.

உடனே சுங்க அதிகாரி என்னைப் பார்த்து, "இந்தப் பார்சல் இன்று செல்லுமானுல், இதை அனுமதிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை" என்று கூறி, ஸ்ரீ ஷகாயின் கடிதத்தை என்னிடமே திரும்பிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். பார்சலைத் திறந்து காட்டுவதைக் கூடத் தடுத்துவிட்டார் குமஸ்தா.

பின்னர், விமானக் கம்பெனியின் அதிகாரியிடம் ஸ்ரீ ஷகாயின் கடிதத்தைக் கொடுத்தேன். அவர் அதைப் படித்து விட்டுத் தம்மால் ஒன்றும் செய்ய இயலாதென்று கடிதத்தை என்னிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

இது ஒரு சிறு பார்சல் அல்லவென்றும், அரூபாதீவில் முக்கியமென்று கருதப் பெறும் அத்தனை பேரும் இப்படத்தைப் பார்க்கக் காத்திருக்கிருர்கள் என்றும், அரூபாவில் உள்ள இந்திய சமூகத்தினரின் மதிப்பும், டிரினிடாடில் உள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியின்

கௌரவமும் இன்று இந்தப் பார்சலைப் பொறுத்திருக்கிறது என்றும் எவ்வளவோ கூறினேன். விமானக் கம்பெனி அதிகாரி சிறிதும் தளரவில்லை.

மணி எழுடிக்கப் போகிறது. விமானக் கம்பெனியின் அதிகாரியும், குமஸ்தாவும் பிரயாணிகளை அழைத்துக் கொண்டு, ஐம்பது கஜ தூரத்தில் நிற்கும் விமானத்துக்குச் சென்றனர். நானும் பார்சலை எடுத்துக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தேன்.

விமான நிலையக் கட்டிடத்தைவிட்டுக் கீழிறங்கியதும், ஐந்து கஜ தூரத்தில் பெரிய வெள்ளைக் கோடு. 'பிரயாணிகள் தவிர வேறு யாரும் இந்தக் கோட்டைத் தாண்டி உள்ளே செல்லக் கூடாது' என்று ஓர் அறிவிப்புப் பலகை காணப்பட்டது.

அந்த இடத்துக்கு வந்ததும், குமஸ்தா என்னைக் கடுமையாகப் பார்த்து, உரத்த குரலில், "நீங்கள் பிரயாணி அல்ல; இந்தக் கோட்டைத் தாண்டி உள்ளே வரக்கூடாது" என்று கர்ஜித்தார்.

இதனை அங்கிருந்த காவலாளிகள் கவனித்தனர். நான் பயந்துவிட்டேன். மனமொடிந்துத் திரும்பிச் சில அடி தூரம் சென்றேன்.

அங்கு நின்று கொண்டு, இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த இந்தியப் போர்ட்டர்களில் ஒருவர், என்னைப் பார்த்து, "ஏன் திரும்புகிறீர்கள்?" என்றார்.

"வெள்ளைக் கோட்டைத் தாண்டக் கூடாது என்று சொல்லுகிறார்களே!" என்றேன்.

"நீங்கள் தாராளமாகப் போகலாம். வேலையில்லாதவர்கள் தான் போகக் கூடாது. உங்களுக்கு வேலையிருக்கிறது. இந்தப் பார்சலைக் கொண்டு போய், விமானம் ஓட்டுகிறவரிடம் அல்லது விமானத்திலுள்ள சிப்பந்தியிடம் கொடுங்கள்" என்றார்.

இவர் இவ்வாறு கூறியதும் எனக்கு உடனே தைரியம் உண்டாயிற்று. வேகமாக வெள்ளைக் கோட்டைத் தாண்டி விமானம் நிற்கும் இடத்துக்குச் சென்றேன். வழியில் இருந்த காவலாளரை லட்சியம் செய்யவே இல்லை. ஆனால் வழியில் நின்றுகொண்டிருந்த சுங்க இலாகா சிப்பந்திகள், "இந்தப் பார்சல் சுங்க அனுமதி பெற்று விட்டதா?" என்று கேட்டனர். "உங்கள் அதிகாரியிடம் ஏற்கெனவே அறிவித்தாயிற்று" என்றேன்.

பிரயாணிகள் அனைவரும் விமானத்துக்குள் ஏறிவிட்டனர். நானும் விமானத்துக்குள் ஏறினேன். அங்கிருந்த சிப்பந்தி (Air-host) ஓர் ஐரோப்பிய இளைஞர். இந்தப் பார்சலையும், இதற்குச் செலுத்த நேரும் கட்டணத்துக்காக இருபது டாலர் நோட்டையும் அவரிடம் கொடுத்தேன். அவர் உடனே விமானக் கம்பெனியின் அதிகாரியைக் கூப்பிட்டார்.

"இவர் நேரம் கழித்து வந்ததால், இந்தப் பார்சலை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தாங்கள் விரும்பினால் உதவி செய்யலாம்" என்று கம்பெனி அதிகாரி ஐரோப்பிய இளைஞரிடம் கூறினார்.

"நான் உதவி செய்யத் தயார்தான். ஆனால் பணம் பெற்றுக்கொள்ள மாட்டேன்" என்று கூறி ஐரோப்பிய இளைஞர் இருபது டாலர் நோட்டை என்னிடம் திருப்பிக் கொடுத்தார்.

கம்பெனி அதிகாரியுடன் நான் விமானத்தை விட்டுக் கீழிறங்கினேன். நேராக சுங்க அதிகாரியின் காரியாலயம் சென்றேன்.

சுங்க அதிகாரியிடம் ஸ்ரீ ஷகாயின் கடிதத்தைக் கொடுத்து, அவர் உதவிக்கு நன்றி செலுத்தினேன்.

"பார்சல் எங்கே?" என்றார் சுங்க அதிகாரி.

"விமானத்தில் சேர்ப்பித்து விட்டேன்?" என்றேன்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "எனது அனுமதியில்லாமல் எவ்வாறு பார்சலை விமானத்துக்கு எடுத்துச் செல்லலாம்?" என்றார்.

அவரிடம் பார்சலைக் காட்டுவதற்காகக் காத்திருந்தால் விமானம் புறப்பட்டிருக்குமென்றும், அவருடைய அதிகாரத்தை மதியாமல், வேண்டுமென்றே இக்காரியத்தைச் செய்யவில்லை என்றும் கூறினேன்,

"பார்சலைச் சோதித்துப் பார்த்தால்தானே திரும்ப அது அருபாவிலிருந்து வரும்பொழுது நான் அத்தாட்சி கொடுக்க முடியும். பார்சலை நான் அனுமதிப்பதாகச் சொன்னேனே தவிர, விமானத்துக்குள் அனுப்பும்படிச் சொல்லவில்லை. நீங்கள் செய்தது தவறு" என்று மிகவும் கோபத்துடன் உரக்கக் கூறினார்.

எங்களுடைய சம்பாஷணையை விமானக் கம்பெனி சிப்பந்திகளோ அல்லது சுங்க இலாகா சிப்பந்திகளோ கவனித்து, விமானக் கம்பெனி அதிகாரிக்குச் சைகை செய்திருக்க வேண்டும். பார்சலை விமானத்திலிருந்து வெளியே போட்டுவிட்டார்கள். விமானம் புறப்படுவதற்காகத் திடலுக்குச் சென்றுவிட்டது.

விமானக் கம்பெனி அதிகாரி, சுங்க அதிகாரியின் அறைக்கு வந்தார்.

"பார்சல் எங்கே?" என்றார் சுங்க அதிகாரி.

"நீங்கள் அனுமதித்ததாக நினைத்துத்தான் விமானத்துக்குள் எடுத்துக்கொண்டோம். பிறகு தாங்கள் ஆட்சேபித்தது தெரிந்ததும் பார்சலை வெளியே கொண்டு வந்து சுங்கப் பரிசோதனைக் கொட்டகையில் வைத்திருக்கிறோம்" என்றார் கம்பெனி அதிகாரி.

சுங்க அதிகாரியுடன் எல்லோரும் கொட்டகைக்குச் சென்றோம்.

பார்சலைத் திறந்து காட்டும்படி கூறினார் சுங்க அதிகாரி. திறந்து காட்டினேன். சில விநாடிகளில் அதனைப் பார்த்துவிட்டு 'அனுமதி' கொடுத்துவிட்டார்.

"இப்பொழுது அனுமதி கொடுத்து என்ன பிரயோசனம்? இதனை இன்று அனுப்ப அதிர்ஷ்டமில்லாமல் போய்விட்டது. தாங்கள் ஏற்கெனவே இக்கடிதத்தைப் பார்த்து உதவி செய்வதாக வாக்களித்ததால்தான், நான் பார்சலை விமானத்துக்குள் கொண்டு போனேன். தங்களையோ தங்களுடைய அதிகாரத்தையோ புறக்கணிக்கும் தவருன எண்ணத்துடன் எதுவும் செய்யவில்லை. அவ்வாறு நான் செய்ய முயற்சித்ததாகக் கருதினுல் தயை செய்து மன்னியுங்கள்" என்றேன்.

அப்பொழுது சுங்க அதிகாரி, "ஸ்ரீ ஷகாய்க்கு எந்த உதவியும் செய்ய நான் தயாராயிருக்கிறேன். இம்மாதிரி இப்பொழுது நேர்ந்துவிட்டதற்காக வருந்துகிறேன்" என்ருர்.

"இந்தப் பார்சல் இன்றைய விமானத்தில் செல்ல வேண்டும் என்று விரும்புகிறீர்களா?" என்று கம்பெனி அதிகாரி, சுங்க அதிகாரியைக் கேட்டார்.

உடனே சுங்க அதிகாரி ஆவலுடன், "அது சாத்தியமா?" என்ருர்.

அவ்வளவு தான், கம்பெனி அதிகாரி மின்னல் வேகத்தில் மேல் மாடிக்கு ஓடினுர். அங்குள்ள 'கண்ட்ரோல்' அறையிலிருந்து ரேடியோ மூலம், அப்போதுதான் புறப்படத் தயாராக இருந்த விமானத்தைத் தாமதிக்கும்படிச் செய்தார்.

விமான நிலையத்துக்கும், விமானம் புறப்பட வேண்டிய திடலுக்கும் சுமார் மூன்று பர்லாங் இருக்கும். விமானம் உடனே புறப்படாது. இறக்கைகளைச் சுற்றி, சூடேறிய பின்னர்தான் கிளம்பும். இதற்குச் சில நிமிஷங்களாகும். இதற்குள்ளாக அதிர்ஷ்டவசமாக விமானத்தைத் தாமதிக்கச் செய்ய முடிந்தது.

பின்னர் ஒலி பெருக்கி மூலமாகக் கம்பெனி அதிகாரி, தங்கள் கம்பெனியின் சிறிய மோட்டார் லாரியை விமான நிலையத்துக்குள் வரும்படி உத்தரவிட்டார். புறப்பட்டுக் கொண்டிருந்த விமானத்தைத் தாமதிக்கச் செய்வது மிகவும் அபூர்வமாகத்தான் நடைபெறுமாம். எனவே விமான நிலையத்திலிருந்த எல்லோரும், என்ன நடக்கிறதென்று வேடிக்கை பார்க்கவந்துவிட்டனர்.

கம்பெனியின் சிறிய லாரி வந்தது. அதிலிருந்த சிப்பந்தி, பார்சலை வாங்கிக்கொண்டு, திடலில் புறப்பட்டுக் காத்து நின்ற விமானத்துக்குச் சென்றார். விமானத்தின் கதவு திறந்தது. லாரியின் மேலிருந்தபடியே, சிப்பந்தி பார்சலைக் கொடுத்தார். உள்ளிருந்த ஐரோப்பிய இளைஞர் அதை வாங்கினர். கதவு மறுபடியும் மூடியது. கம்பெனியின் லாரி விரைவில் திரும்பிற்று. சில விநாடிகளில் விமானம் பறந்தது.

விமானம் பார்வையிலிருந்து மறையும்வரைக்கும் அதையே பார்த்துக் கொண்டு நின்றேன். எல்லாம் திரைப் படக் காட்சி போல இருந்தது. உடம்பு சிலிர்த்தது. ஆண்டவனின் அருளை எண்ணி மகிழ்ந்தேன்.

சுங்க அதிகாரிக்கும் கம்பெனி அதிகாரிக்கும் எனது நன்றியைத் தெரிவித்தேன். கம்பெனி குமஸ்தாவிடம் விடைபெற்றபொழுது அவர் என்னை அன்புடன் உற்று நோக்கினர்.

இந்தியப் போர்ட்டரை நான் மறக்கவில்லை. அவரிடம் சென்று நன்றி தெரிவித்தேன். அன்பளிப்பாகச் சிறு தொகையும் கொடுத்தேன்.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த துர்க்காவுக்கு ஒரே உற்சாகம். நேராக நகருக்குச் சென்றோம். எட்டு மணிக்குத்தான் 'கேபிள்' ஆபீஸ் திறப்பார்கள். திறந்ததும் முதல் தந்தி எங்களுடையது.

விமானம், காலை ஒன்பதேகால் மணிக்குத் தான் அருபா போய்ச் சேரும். ஆனால் தந்தி எட்டேகால் மணிக்குள் கிடைத்துவிடும்.

ஸ்ரீ ஷகாயின் விருப்பத்தை, நண்பருடைய விருப்பம் என்று நான் கருதவில்லை. எனது அரசாங்கத்தின் பிரதிநிதி இட்ட பணியாகவே மதித்து நடந்தேன்.

ஸ்ரீ ஷகாய் விபரம் தெரிந்துகொள்ள ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார். இட்ட பணியை நிறைவேற்றியதாக அவரிடம் கூறினேன்.

அன்று காலை அரசாங்கப் பிரதிநிதியின் காரியாலயம் சென்று, ஸ்ரீ ஜெயபாலிடம் நடந்த விபரங்களைக் கூறினேன். காரியாலயத்திலிருந்த சிப்பந்திகளுக்கு, துர்க்கா மூலமாக அன்று காலை நிகழ்ச்சிகள் தெரியவந்தன. எல்லோருக்கும் ஆச்சரியம்; சிலரால் இதனை நம்ப முடியவே இல்லை.

எல்லோரும் என்னை வந்து பாராட்டினார்கள். அப்பொழுது எனக்கும் பெருமையாகத்தான் இருந்தது பார்சல் அனுப்பியதில் எனக்கு மகிழ்ச்சியே. ஆனால் இந்தப் பாராட்டுக்களுக்கு நான் உரியவன் அல்ல என்று என் மனச் சாட்சி கூறியது.

இந்தச் சம்பவத்தில் உண்மையான சூத்திரதாரி யார்?

# பாணிக்கிரகணமும்
# பரசுராம பங்கமும்

ஸ்ரீ. ராஜகோபாலன்

மறு நாள் காலை, ஜனக மன்னன் முனிவரையும் அரசிளங்குமரர்களையும் ஏகி, மிக்கப் பணிவுடன் தாம் செய்யவேண்டியது ஏதேனுமுளதோ என்று வினவ, விசுவாமித்திரர் அரசகுமரர்கட்கு ஜனகனது மிகவும் புகழ் பெற்ற சிவதனுசைக் காண்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

"அவ்வில்லானது நீண்டகாலமாக எங்கள் வசமுளது. முன்னாள் சிவபிரான், தம் மாமனார் தக்ஷனால் அவமான மடைந்த போது வெகுண்டு அவ்வமயம் அங்கு கூடியிருந்த தேவர்களை வதம் செய்ய உத்தேசித்தார். பின்பு கருணைமேலிட்டு, அவர்களை மன்னித்துத் தமது வில்லை அவர்களிடம் ஒப்படைத்தார். பின்னர் தேவர்கள் அதை என் முன்னோர் ஒருவரிடம் கொடுத்து விட்டுச் சென்றார்கள். நிற்க, ஒரு நாள் யான் யாகபூமியை உழுதேன். கலப்பையின்கீழ் ஓர் அழகிய பெண் குழந்தையைக் கண்டெடுத்தேன். அவளை, சீதாதேவி எனப் பெயரிட்டு, என் மகளாக ஏற்றுக்கொண்டனன். அவளை விவாகம் செய்வதற்கு ஒரு நிபந்தனை ஏற்படுத்தியுள்ளேன். அதாவது, இந்த வில்லை நாணேற்றும் யுவனுக்குத்தான் இவளை மணம் செய்து கொடுப்பதென தீர்மானித்தேன். அரசர்கள் பலர் இது விஷயமாக என்னுடன் மனத்தாங்கல் கொண்டனர். ஆனால் ஒருவராலும் அவ்வில்லின் சமீபம்கூட வரமுடியவில்லை. பிறகு மிகுந்த சினங்கொண்டு அவர்கள் மிதிலையை

ஒரு வருஷகாலம் முற்றுகையிட்டனர். என் சேனைகளுக்கு அதிக சேதம். பின்னர் யான் போய், தேவர்களை அணுகித் தவம் செய்து, சதுரங்க சேனையொன்றைப் பெற்றேன். அரசர்கள் அதை எதிர்க்க முடியாமல் ஓடிவிட்டனர். இவ் வில்லை இராமலட்சுமணர் பார்க்கட்டும். இராமன் நாணேற்றி விட்டால், சீதையை மணக்க உரியவனு வான்" என்று ஜனக மன்னன் உரைத்தார்.

முனிவர், "சரி, அதைக் கொண்டுவரச் சொல்லு" என்று உத்தரவு செய்தார். அது ஒரு பெரிய காரியமாயி ருந்தது. தோள் வலியுடைய 5000 ஆட்கள், எட்டு சக்கரங் கள் பூட்டிய வண்டியில் வெகு சிரமப்பட்டு அதைக் கொணர்ந்தனர்.

ஜனக மன்னன் மீண்டும் "மகரிஷியே! இது மகத் தான வில். தேவகணங்கள், அசுரர்கள், ராக்ஷசர்கள், ஏன், மேலுலகத்தினர் யாவரும், இதை நாண் ஏற்று வதற்கோ, தூக்குவதற்கோ தகுதியற்றவர்கள். கேவலம் மானிடர்கள் என்ன செய்யமுடியும்? இதை அரச குமாரர்களுக்குக் காட்டுங்கள்" என்று சொன்னர்.

விசுவாமித்திருக்கு இராமனது பராக்கிரமம் நன்கு தெரியும். இராமனுக்கு இது பெரிய காரியமில்லை. ஏனினும் இருவரும் அவையடக்க முடையவர்கள். முனிவர் "குழந்தாய், (வத்ஸ் என்று இச்சந்தப்பத்தில் அழைத்தது குறிப்பிடத் தக்கது. மாபெரும் வில். ஆனல் வளைக்கப் போகிறவர் பாலகன்) ராமா, இந்த வில்லை பாரப்பா" என்று சொன்னர்.

இராமனும் பார்த்தார். பின்பு ரிஷியை நோக்கி, "நான் எடுத்து வளைக்கலாமா" என்று விநயமாகக் கேட்டார்.

"அதற்கென்ன தடை?" என்று மன்னனும் முனிவரும் சொன்னர்கள்.

அவ்வமயம் ஆயிரக் கணக்கானவர்கள் குழுமியிருந்தனர். மிகவும் அலட்சியமாகவும், ஏதோ ஒரு விளையாட்டு போலவும் கருதி, வில்லை மத்தியிலேயே பிடித்துத் தூக்கி விட்டார். நாணேற்றினர். ஆனால் "மளார்" என்று வில்லே முறிந்து விட்டது. எங்கும் பெரிய சப்தம். மலை பிளப்பது போல இருந்ததாம். முனிவர், அரசிளங் குமரர்கள், மன்னன் இந் நால்வரைத் தவிர, ஏனையோர், அவ்வோசையால் கிலிபிடித்து மூர்ச்சையடைந்தனர்.

மன்னனுக்கு மட்டிலா மகிழ்ச்சி. "பகவானே! இது என்ன? என்னால் நினைக்க கூடமுடியவில்லையே! தசரன் மகன் ராமனைக் கணவனாக அடைந்து என்மகள் என்குலத்திற்கே புகழ் உண்டாக்கப் போகிறாள். என் பிரதிக்ஞை நிறைவேறியது. எனது உயிரிலும் மேலான சீதையை தங்கள் அனுமதி பெற்று ராமனுக்கு கொடுக்கிறேன். என்று சந்தோஷப்பட்டு ஆராவாரம் செய்தார். உடனே தசரதச் சக்கரவர்த்தியை மிதிலைக்கு அழைத்து வருமாறு மந்திரிகளை ஏவினார்.

ஜனகனின் தூதர்கள், மூன்று நாட்கள் பிரயாண இறுதியில், அயோத்தி போய்ச் சேர்ந்தனர். விரைவில் அரசனைப் பார்த்து நடந்தவைகளைச் சொன்னார்கள். உடனே, தசரத சக்கரவர்த்தி, தம் புரோகிதர்கள், மந்திரிகளை வரவழைத்து, அவர்களுடன் கலந்து யோசித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். யாவரும் சம்மதம் தெரிவித்தனர். மறுநாளே மிதிலைக்குப் புறப்பட ஏற்பாடாயிற்று. எங்கும் குதூகலமும் ஆராவாரமும் நிலவின. புறப்படுமுன், தசரதன் மந்திரி சுமந்திரரைக் கூப்பிட்டு, பொக்கிஷ அதிகாரிகளை ஏராளமான பொன்னும் பொருளும் ரத்னாபரணங்களும் எடுத்துக் கொண்டு வரும்படி உத்தரவு செய்தார். முதல் முதலாக ரிஷிகளும்,

அந்தணர்களும் சென்றனர். அவர்களைப் பின் தொடர்ந்து மன்னனும் அவரது பரிவாரங்களும், அதை ஒட்டி சதுரங்கசேனையுமாகச் சென்றனர். பிரயாணம் நான்கு நாட்கள் ஆயிற்று. ஜனகன் எதிர் கொண்டழைத்தார். விவாகத்தை நடத்திவைக்குமாறு வேண்டிக் கொண்டார்.

தசரதன் ஜனகனைப் பார்த்து "வசிஷ்டர் எங்களுக்குக் குல தெய்வம் போன்றவர். விசுவாமித்திரர் அனுமதியின் பேரில் இச் சபையோரின் முன் என் முன்னோர்கள் வரலாறு சொல்லப்படட்டும்" என்று கேட்டுக் கொண்டார். அவ்வமிசம் சாமான்யமானதல்ல. பிரமதேவனிடமிருந்து தோன்றிய மகா மேதாவிகள், தர்மவான்கள், வீர்யவான்கள் ஆகியஇவர்களுடைய வரலாறு யாவும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லப்பட்டன. அத்துடன் நிற்கவில்லை. மேலும் சொன்னார், "நற்குலத்தில் தோன்றிய இவ்விரு குமாரர்களும், தர்மம் செய்பவர்கள், வீர பராக்ரமம் பொருந்தியவர்கள். உண்மையே உரைப்பவர்கள். இவர்கட்கு உங்கள் இரு குமரிகளையும் முறையே பாணிக்கிரகணம் செய்து கொடுங்கள்."

ஜனகன் இதற்குப் பின்னர் தம் வம்சாவளியை விவரித்தார். பிறகு, தம் சகோதரன் குஜத்வஜனையும் அறிமுகப்படுத்தினர். சீதையை இராமனுக்கும் குஜத்வஜன் குமரி ஊர்மிளையை இலட்சுமணனுக்கும் வெகு அன்புடன் கொடுக்க முன்வந்து ஏற்கவேண்டும் என்று கேட்டு கொண்டார். உடன் விவாகச் சடங்குகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்.

இந்தச் சமயத்தில் விசுவாமித்திரர் மற்றொரு பெரிய காரியத்தைப் பற்றிச் சர்ச்சை செய்தார். முனிவருக்கு

இராம லக்குமணிடம்தான் பழகி அன்பு ஏற்பட்டது. எனினும் தசரதனுடைய மற்றமைந்தர்களிடமும் அவருக்குப் பாசம் ஏற்பட்டிருந்தது தெரியவந்தது. ஜனகனைப் பார்த்து "அரசனே! மகாத்மாக்களான இருபாலகர்கள் பரதன் சத்ருக்கனுக்கு உமது சகோதரன் தர்மாத்மா குஜத்வஜனின் குமாரிகள் இருவர்களையும் முறையே விவாகம் செய்யலாமே." என்று வேண்டிக் கொண்டார். ஜனகனும் சம்மதித்தார். எல்லோரும் ஆமோதித்தனர். பின்னர் தசரதன் வைதீகச்சடங்குகளைச் செவ்வனே செய்து முடித்தார். ஏராளமான பசுக்களையும், பொருள்களையும் தானம் செய்தார். அவ்வமயம் அவ்வரசன் லோகபாலர்களுடன் கூடிய புத்திரர்களுடன் இருந்தது பிரம்மதேவர்போல் இருந்ததாம்.

இவ்விவாகங்களில் கவனிக்கக்கூடிய அம்சங்கள் பல உள. சீதை-ராமன் மணம் வீர்யப்பந்தயத்தின் முன்னிலையில் ஏற்பட்டது. ஏனையவை மனபொருத்தத்தின் பேரில் உடனே நிச்சயிக்கப்பட்டது. விசுவாமித்திரர், வசிஷடர் தாம் இதில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டனர். ஜனங்களோ, தசரதமன்னனோ, அல்லது அவர்களின் மனைவிகளோ சுற்றத்தார்களோ யாரும் இதைப் பற்றிச் சர்ச்சை செய்யவில்லை. முக்கியமாக, பரதன் விஷயமாக கைகேயி தலையிடவில்லை. அவள் தகப்பனுருக்கும் விஷயம் தெரியாது.

மேலும் விவாகத்திற்கு முன் தம்பதிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளவில்லை. ஏதோ தசரதனும் ஜனகனும் சந்தித்தனர். ஒருவருக் கொருவர் நட்பு ஏற்பட்டது. விருப்பு வெறுப்பு அற்றமுனிவர்கள், 'இவளை அவனுக்குக்கொடு, அவனை இவளுக்குக் கொடு' என்று நிச்சயித்தார்கள். அதை அப்படியே எல்லோரும் ஏற்று

கொண்டனர். தகப்பன்மார்கள் தங்கள் தங்கள் குலங்களை விவரித்தனர். அவ்வளவுதான். வேறு ராஜீய, பொருளாதார விஷயங்களில் தலையிடவில்லை. மனப் பொருத்தம் இருந்ததில் மற்றவை மாயமாய் மறைந்தன. இந்த மணம் "பிராம விவாகம்" என்று சிலாகிக்கப்பட்ட மணவகை ஆகும். தற்காலத்திலோ என்றால் தனப் பொருத்தம் முக்கியமாகி விட்டது. பிறகு ஜாதகப் பொருத்தம். அத்துடன் வசிய பொருத்தம், அதாவது மணமகளை மணமகன் பார்த்துவிட்டு அங்கீகாரம் செய்வது. இன்னும் பல வேறு விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றன. இவையெல்லாம் தருமத்திற்கும் தேச நலனுக்கும் அனுகூலமானவை என்று சொல்வதற்கில்லை. நாளடைவில் நாட்டுக்கே நாசம் விளைப்பவை ஆகவும் மாகலாம்.

விவாகத்திற்கு முந்திய நாள் தற்செயலாக, பரதன் மாமன் யுதாஜித் மிதிலைக்கு வந்து சேர்ந்தான். பரதனைப் பார்ப்பதற்காக அயோத்திக்குச் சென்றதாகவும், அங்கு யாவரும் இங்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்ததாகவும் அவன் சொன்னான். மறு நாள் காலை விவாக மண்டபத்திற்கு முதன் முதல் தசரத மன்னனும், அவர் குமாரர்களும் வந்தனர். வசிஷ்டர் ஜனகனை அணுகி "கன்னிகா தானத்தைக் கொடுக்கவாருங்கள். இந்த தானம்தான் கொடுப்பவர்கட்கும் வாங்குபவர்கட்கும் நலன் உண்டாக்குவது" என்றுரைத்தார். (சாஸ்திரத்தில் மற்ற தானம் கொடுப்பவனுக்குப் புண்யமுண்டு: ஆனால் வாங்குபவருக்கும் ஒருவித அழுக்காறு உண்டு என்று கூறப்பட்டிருக்கிறது.) ஜனகனும் வசிஷ்ட முனிவரையே விவாக வைபவங்களை வைதிக முறைவழுவாதபடி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். வசிஷ்டரும் விசுவாமித்திரர், சதானந்தர் இவர்களை முன்னிட்டுக்கொண்டு சகலவித காரியங்களையும் செவ்வனே செய்து முடித்தார்.

அவ்வைபவத்தில் சீதாதேவி தனிச் சோபையுடன் விளங்கினாள். சகல ஆபரணங்களும் வாசனுலங்களுடனும், குங்கும நிறமான பட்டை உடுத்திக் கொண்டிருந்தாள். நல்ல சிவப்பான மேலாடையால் உடல் முழுவதும் போர்த்திக் கொண்டிருந்தாள். இராகவன் அருகில் அழைத்துக்கொண்டு போகப்பட்டாள். ஜனகமன்னனும் ராமனைப் பார்த்து,

"கௌசல்யவின் களிப்பிற்குகர்ந்தவனே! இவள் என் குமரி. இவள் உனக்கு நீ செய்யும் நற்காரியங்களுக்கும் உகந்தவள். மகா உத்தமி. உன்னுடைய நிழல் போல், உன்னை விட்டுப் பிரியாதவள். இவள்கையைப்பிடி" என்று சொல்லி, மந்திரங்களால் தீர்த்தத்தைப் பூமியில் விட்டான். அத்தருணம் எங்கும் சந்தோஷ ஆரவாரங்கள் கிளம்பின. மேல் உலகினரும் சளைக்கவில்லை. புஷ்பமாரி பெய்தனர். (சீதையை இராமன் முதல் தடவையாகப் பார்த்தது இப்பொழுதுதான். இதற்குமுன் பார்த்து இருவரும் காதல் கொண்டனர் என்பதற்கு வால்மீகியில் ஆதாரமில்லை).

பிறகு ஊர்மிளையை இலக்குவனுக்கும், மாண்டவியை பரதனுக்கும், சுருதகீர்த்தியை சத்துருக்கனுக்கும், ஜனகமன்னனே பாணிக்கிரகணம் செய்து கொடுத்தார். எல்லாம் வசிஷ்டமுனிவர் ஆதரவில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. அவ்வமயம் ஓர் அற்புதமும் ஏற்பட்டது. மேல் உலகத்தினின்று பாட்டு, வாத்யம் முழங்கக் கேட்டன. அமோகமான புஷ்பமாரியும் பெய்தன. அப்ரஸஸ்திரீகள் நடனமாடினர். கந்தர்வர்கள் பாடினர். இவைகளைக் கேட்டுக் கொண்டே அந்நால்வரும் அக்கினியை மூன்று முறை வலம் வந்தனர். பிறகு யாவும் பூர்த்தியான பிறகு, அம்மைந்தர்கள் ஒவ்வொருவரும்

தங்கள் மனைவிமார்களுடன் தனி வாகனங்களில் ஏறிக்கொண்டு, மிதிலா நகரத்தைச் சுற்றி வந்தனர். தசரத மன்னனும் சந்தோஷமடைந்து, அவர்கள் பின் சென்றார்.

இரவு கழிந்தபின், விசுவாமித்திர முனிவர் தசரத மைந்தர்களைக் களிகூர்ந்து ஆசிர்வாதம் செய்துவிட்டு, அரசர்கள் இருவரிடமிருந்தும் விடைபெற்றுக்கொண்டு வடக்குத் திசையிலுள்ள மலைக்குப் பிரயாணமானார். பிற்பாடு இராமாயணத்திலாவது பிந்திய யுகங்களிலாவது, இம்முனிவர்பிரான் பூவுலகிற்கு வரவில்லை. அவர் அயோத்திக்கு வந்தது தம் சுயகாரியத்திற்கு மட்டும் இல்லை, இராமலக்குமணர் பரத சத்துருக்கனர் இவர்களுக்கும் ஜனகமன்னன் குடும்பத்தினருக்கும் விவாக சம்பந்தம் ஏற்படுத்தவும், பிற்காலத்தில் இராமனுக்கு ஏற்படவிருக்கும் இன்னல்களைப் போக்குவதற்குத் தகுந்த வகை செய்வதற்கும் முனைந்தார். தன்னலமற்ற செய்கைகள். ஏன், அவர் பெயரே காரணப் பெயராக ஏற்பட்டுவிட்டது. "விசுவாமித்திரர்" என்பதன் பொருள் "ஊருக்கு நல்லவர்" என்பது.

முனிவர் சென்றதும், தசரதனும் தம் பரிவாரங்களோடு மிதிலையைவிட்டுப் புறப்பட்டார். ஜனகமன்னன் பரம சந்தோஷத்துடன், ஏராளமான சீர்வகைகளை அனுப்பினார். யானைகள், பசுக்கள், குதிரைகள், ரதங்கள், காலாட்படைகள். வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், பெரும் அளவில் கொடுத்தார்.

தசரதமன்னன் கோஷ்டி சிறிதுதூரம் சென்றவுடன் திடீரென்று வானத்தில் சில துர்நிமித்தங்கள் தென்பட்டன. வசிஷ்டரிடம் பிரஸ்தாபித்தார் மன்னன். ஒருவருக்கும் புரியவில்லை. ஒரு பலத்த காற்று வீசிற்று. எல்லோரும் நடுக்க முற்றனர். எங்கும் இருட்டு. புழுதிமயம். அவைகளினின்று ஒரு பயங்கர உருவம் தென்பட்டது.

கோடாரி, வில், அம்புடன், பரசுராமர் அவ்விடம் வந்து சேர்ந்தார். யாவரும் திகில்அடைந்தனர். வசிஷ்டரும் ஏனைய முனிவர்களும் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தனர். "என்ன, இது இவர் க்ஷத்திரியப்பூண்டை அழிப்பவர் ஆயிற்றே! எல்லாம் முடிந்து தபசுக்கு சென்றவர் மீண்டும் வரக்காரணம் என்ன!" என்று கவலையுற்றனர். அச்சமும் அடைந்தனர். சிறிது தைர்யமடைந்து, அவரிடம் சென்று அவருக்கு அர்க்கியம் முதலிய மரியாதைகள் செய்யத் துணிந்தனர். அவரும் அவைகளை ஏற்று கொண்டார். ஆனால் பரசுராமர் ஒருவரையே நாடி வந்திருக்கிறார் என்பது எளிதில் புலப்பட்டது.

"ராம! சிவவில்லை நீ நாணேற்றியதை யான் அறிவேன். ஏன், அச்சப்தத்தையும் நான் கேட்டேன். ஆனால் என்னிடம் ஒரு வில் இருக்கிறது. இது விஷ்ணுவின் தனுசு. இதை மட்டும் நாணேற்றி விடு பார்க்கலாம். பின்பு நாம் ஒருவரோடொருவர் யுத்தம் செய்வோம்" என்றார்.

தசரதன் நடுங்கிவிட்டார். பிறகு கெஞ்சினார். "ராமன் ஒருவன் மாண்டால், நாங்கள் யாவரும் உயிர் பிழையோம்" என்றும் சொன்னார்.

ஆனால் பரசுராமர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. ராமனை மீண்டும் நோக்கி "இந்த வில் எனது குலத்தனம். நான் தவஞ்செய்துகொண்டிருந்தவன். இந்த வில் உன்னால் நாணேற்றப்படவேண்டும் என்று உத்தேசித்துக் கொண்டு இவ்விடம் வந்திருக்கிறேன், இதை நாணேற்று. பின்பு யுத்தத்திற்குத் தயாராக இரு" என்று மீண்டும் உத்தரவிட்டார்.

இதுகாறும் மௌனமாயிருந்த இராமன், தந்தையை அணுகி மரியாதை செய்து, பின்னர் பரசுராமரிடம்

சென்று, "உயர் அந்தணரே, உமது பராக்கிரமம் எனக்கு நன்கு தெரியும். கொடும், உமது வில்லையும் அம்பையும்" என்று மிகவும் கடுமையாகவும் அலட்சியமாகவும் கேட்டார். பாணத்தை வாங்கிக்கொண்டு, வெகு எளிதில் நாணேற்றிவிட்டார். பரசுராமனுக்குக் கிலி பிடித்து விட்டது. இராமன் மீண்டும் சொன்னார். "பிராமணசிரேஷ்டரே! இந்தப் பாணத்தால் ஒரு விநாடியில் உமது உயிரை மாய்த்து விடுவேன். எனினும் நீர் விசுவாமித்திரரின் பந்து. அம்முனிவர்பிரான் என் பூசைக் குரியவர். இதனால் உம்மைக் கொல்லத் துணியவில்லை. மேலும் இது விஷ்ணுவின் வில். வீண் செருக்கு மூடபலம் இவைகளை ஒழிக்கவல்லது. நாணேற்றப்பட்ட இவ்வம்பு வீண் போகாது. ஆகையால் அதற்கு இரையாக உமது வீரியத்தை ஒழித்து விட்டேன்".

பரசுராமனும் நடு நடுங்கி, தம்மை எப்படியாவது மாகேந்திர பருவதம் போகும்படிச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார். அப்படியே இராமனுடைய கருணையினால் தமது தவப்பயனால் கிடைத்த உலகங்களைத் துறந்து, அம்மலைச்சாரலுக்குப் பிரயாணமானார். எல்லோருக்கும் ஒரு பேராபத்து விலகிற்று. இராமனைப் புகழ்ந்தனர். தேவர் கூட்டங்களும் அவ்விதம் செய்தனர். ஏன், பரசுராமனும் இராமனை வணங்கி விட்டு சென்றார்.

வெகு சாகசமான காரியம், க்ஷத்திரிய வம்சத்தையே அதம் செய்தவரை ஒரு நொடியில் ஜயித்தாய் விட்டது. ஆனால் இராமன் கொஞ்சமேனும் கர்வம் அடையவில்லை, மிகவும் பணிவுடன் வசிஷ்டரிடம் சென்று நமஸ்கரித்தார். கிலி பிடித்திருக்கும் தம் தந்தையை அணுகி, பிரயாணத்தைத் துவக்குமாறு கேட்டுக்கொண்டார். தசரதன் இராமனைக் கட்டியணைத்து, தமக்கும் தம் அருமை மைந்தனுக்கும் மறுபிறப்பு ஏற்பட்டதாகவே கருதினார்.

யாவரும் அயோத்தி வந்து சேர்ந்தனர். எங்கும் மட்டிலா மகிழ்ச்சி. தாய்மார்களுக்குத் தம் தம் நாட்டுப் பெண்களைக் கண்டு வெகு ஆனந்தம் ஏற்பட்டது. குமாரர்களும் தங்கள் தகப்பனுர், குரு இவர்களுக்குப் பணிவிடை செய்தனர். சில நாட்கள் சென்றன. தசரத மன்னன் பரதனை அழைத்துக் கொண்டுபோக வந்திருக்கும் மாமன் யுதாஜித்துடன் கேகேய ராஜ்யத்திற்கு, சத்ருக்கனுடன் போக அனுமதி செய்தார். அவ்விருவரும் அங்கு சென்றனர். இராமலட்சுவர் அயோத்தியில் இருந்து கொண்டு, தமது தந்தைக்கும், தாய்மார்களுக்கும், உரிய பணிவிடைகள் செய்து கொண்டு, அரசாங்கத்தில் உள்ளோர் யாவர் நலனையும் கருதிய வண்ணமாயிருந்தனர். ஜனங்களுக்கு இராமனிடம் அதிக அன்பு ஏற்பட்டுவிட்டது. சீதையோ இராமனிடத்தில் உயிரை வைத்திருந்தாள். இராமனும் தம் தந்தையால் அளிக்கப்பட்ட பரிசு எனக் கருதி, வெகு அன்புடன் சீதையைப் பேணி வந்தான். ஏன், விண்ணுலகில் தேவர்கள் மத்தியில் இலட்சுமி தேவியுடன் மகா விஷ்ணு இருப்பது போல், அயோத்தியில் இராமனும் சீதையும் விளங்கி வந்தனர்.

---

# தாவரப் பாதுகாப்பு

செழிப்பாக நடந்துவந்த காபித் தொழிலுக்கு ஒரு பூஞ்சணம் விளைவித்த நாசம் காரணமாகத்தான் தென்னிந்தியாவில் தேயிலைத் தோட்டங்கள் ஏற்பட்டன என்ற உண்மை பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அவ்வாறு காபிச் செடிக்கு நாசம் விளைவித்த பூஞ்சணத்துக்கு "ஹெமீலியா வாஸ்டாட்ரிக்ஸ்" என்று பெரிய பெயர் உண்டு. இந்த நுண்ணிய பூஞ்சணம் யாருமறியாமலே இலங்கை வழியாக இந்தியாவுக்குள் புகுந்து விட்டது.

இதேபோல், பூச்செடி வளர்ப்பதில் நாட்டமுள்ள ஒருவர் கொண்டுவந்து புகுத்திய ஆகாசத் தாமரை என்னும் செடி இப்போது தேசீயப் பிரச்னையாகிவிட்டது.

இவை ஒன்றோடொன்று தொடர்பில்லாத தனி விஷயங்களா? இல்லவே இல்லை. தாவரத் தொற்றுத் தடை அதிகாரியிடம் கேட்டால் அவர் அவைகளுககுள்ள தொடர்பைக் கூறுவார்.

காபிச் செடிப் பூஞ்சணமும், சங்குத் தாமரையும் நாட்டிலுள்ள பயிர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வரக் கூடிய தொற்று அபாயங்களுக்கு எடுத்துக் காட்டிகளாகும். நாம் ஜாக்கிரதையாயிராவிட்டால் தேசத்தின் பயிர்கள் நாசமுற்றுவிடுமென்பதை அறிவுறுத்தும் சின்னங்கள் அவை.

ஆனல், இந்தியாவில் இனிமேல் இத்தகைய ஆபத்துக்கள் அதிகமாக ஏற்பட இடமில்லை. ஏனென்ருல், கண்ணுக்குத் தெரியாமலே வெளிநாடுகளிலிருந்து நுழைந்து

விடக்கூடிய பூச்சி பொட்டுக்களும் தாவர நோய்களும் எவ்வளவு பிரம்மாண்டமான சேதத்தை விளைத்துவிடக் கூடும் என்பதை இந்தியா பூரணமாய் உணர்ந்திருக்கிறது. இவ்வாறு அபாயகரமான அல்லது தொல்லை விளைவிக்கக் கூடிய பூச்சி பொட்டுக்கள் நாட்டினுள் புகாமல் தடுப்ப தற்கு தாவரத் தொற்றுத் தடைதான் சிறந்த பாதுகாப் பாகும்.

## தாவரப் பாதுகாப்பு நிலையம்

உலகத்தின் இதர பகுதிகளில் முக்கியமாய் காணப் படுகிற பல தாவரப் பூச்சி பொட்டுக்களும் வியாதிகளும் இதுவரையில் இந்தியாவில் தலைகாட்டவில்லை. அவை உள்ளே புகுந்துவிட்டால் சர்வநாசம்தான் விளையும். இவ்வாறு அவை நுழைந்து தேசத்துக்கு அனர்த்தம் விளைக்காமல் தடுத்து வருவதற்கு இந்திய உணவு—விவ சாய மந்திராலயத்தின் தாவரப் பாதுகாப்பு—தொற்றுத் தடை டைரெக்டர் காரியாலயம் பணியாற்றி வருகிறது.

எட்டு வருஷத்துக்கு முன் அந்நிலையம் ஏற்படுத்தப் பெற்றதிலிருந்து இது வரையில் இந்தியாவுக்குள் முக்கிய தாவர வியாதித் தொற்று எதுவும் வரவேயில்லை. ஆனால் உருளைக்கிழங்கு வியாதி ("வார்ட்") வெளிநாட்டிலிருந்து வந்த கிழங்குகளில் ஒரு சந்தர்ப்பத்தில் காணப்பட்டது. வியாதி பிடிக்காத சரக்கு என்று அத்தாட்சியளிக்கப்பட்டி ருந்த கிழங்குகளின் விஷயத்தில் அது காணப்பட்டது. அது பேரனர்த்தமாக முடிந்திருக்கக்கூடும். ஆனால், தொற்றுக் கண்டிருந்த பயிரை அழித்துவிடுவதற்கு உடன டியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது; பாதிக்கப்பட்ட நிலத்தைத் தொற்று நீக்கம் செய்வதற்கும் உடனடி நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த நிலத்தின் வழி யாகப் பாய்ந்த தண்ணீர்கூட, வெகுதூரத்துக்கப்பால் உள்ள கொடும்பள்ளத்தில் கொண்டு சேர்க்கப்பட்டது.

அனேகமாய் எல்லா உஷ்ண மண்டல நாடுகளிலும் சாகுபடியாகிற பயிர்களில் சுமார் 20% பயிர் வளரும் போதாவது, தானியம் சேமிப்பிலிருக்கும் போதாவது நாசமடைந்துவிடுகிறது. தாவர வியாதிகள், பூச்சி பொட்டுக்கள், எலி, நரி, குரங்கு முதலிய அழி ஜந்துக்கள் ஆகியவைதான் இந்த நாசத்துக்குக் காரணம். எலிகள் உணவுத் தானியங்களையும், நரிகள் கரும்பையும் வெகு ஆர்வத்தோடு தின்பதால் விவசாயிகளுக்கும் தேசத்துக்கும் பெரும் பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறது.

தாவரப் பாதுகாப்பு நடவடிக்கை மிகவும் அத்தியாவசியமானது என்பதை 1945 ஆம் வருஷத்திய இந்திய பஞ்ச விசாரணைக் கமிஷன் வற்புறுத்தியிருக்கிறது. அது காரணமாகத்தான் இந்திய சர்க்காரின் தற்போதைய தாவரப் பாதுகாப்பு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தியத் தாவரப் பாதுகாப்பு விஞ்ஞானிகள் பல்வேறு பயிர்களையும் பாதிக்கிற முக்கியமான சுமார் 100 பூச்சி பொட்டுக்களையும் சுமார் 50 தாவர வியாதிகளையும் பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தொகுத்திருக்கிறார்கள். அவைகளைச் சரிவரச் சமாளிப்பதற்கான முறைகள் விஞ்ஞான ரீதியில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

தாவரப் பாதுகாப்பு விஷயத்தில், சாதாரணமாக நான்கு முறைகள் கையாளப்படுகின்றன. முதலாவது முறை சுலபமான கைவேலை சாகுபடி முறை. இரண்டாவது முறை நன்கு பலனளிக்கக்கூடிய பூச்சி நாச மருந்துகளை உபயோகிக்கும் முறை. இதற்காகத் தாவரப் பாதுகாப்பு டைரெக்டர் காரியாலயம் ஏராளமான பரிசோதனைகளையும் பரிசீலனைகளையும் நடத்தியிருக்கிறது.

மூன்றுவதாக ஜீவஜந்துக்கள் ரீதியான கட்டுப்பாடு ஏற்பாடு. இதற்காக பூச்சி பொட்டுகளின் இயற்கை

எதிரிகளான ஜந்துக்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த முறை வெற்றிகரமாய்க் கையாளப்பட்டு வந்திருப்பதற்கு உதாரணமாக, தென்னிந்தியாவில் சப்பாத்துக் கள்ளிகளை ஒழிப்பதற்காக "கொச்னீல்" பூச்சியை உபயோகித்ததைக் கூறலாம். இந்த முறை இன்னும் அதிக விஸ்தாரமாகக் கையாளுவதற்கான தோது இருக்கிறது. சீக்கிரமே பங்களூரில் ஜீவஜந்துக்கள் கட்டுப்பாட்டுக்கான காமன்வெல்த் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும். கொழும்புத் திட்டப் படி இந்நிலையம் ஏற்படுத்தப்படும்.

நான்காவது முறை, வியாதி எதிர்ப்பு சக்தியுள்ள பயிர் ரகங்களை வளர்க்கும் முறை.

### நிலையத்தின் பொறுப்புக்கள்

தாவரப் பாதுகாப்பு—தொற்றுத் தடை—சேமிப்பு டைரெக்டர் காரியாலயத்தின் வேலைப் பொறுப்புக்கள் பின் காணும் பணிகளுள் அடங்கும். அகில இந்திய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிபொட்டுக்கள், வியாதிகள் ஆகியவைகளை ஒழிப்பதற்காக ராஜ்ய சர்க்கார்களின் கூட்டுறவுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வது; கடல், தரை, ஆகாய மார்க்கங்களில் இறக்குமதியாகும் தாவரப் பொருள்கள் மூலமாக இந்தியாவுக்குள் புதிய தாவரப் பூச்சி பொட்டுக்கள், அல்லது வியாதிகள் புகுந்துவிடாமல் தொற்றுத்தடை நடவடிக்கை எடுப்பது; வெட்டுக்கிளிக் கட்டுப்பாடு; புதிய பூச்சி நாச மருந்துகளைப் பரிசோதித்துப் பார்ப்பது.

இப்போது, சரியானபடி பரிசீலனைசெய்து தொற்று நீக்கம் செய்யாமல் உயிரோடுள்ள எந்தத் தாவரத்தையும் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. தொற்று நீக்கத்துக்காகத் தாவரப் பொருள்

எல்லாம் விஷப் புகையடிக்கப்படுகின்றன. அதற்கு, மெதில் ப்ரொமைட், ஹைட்ரோசயனிக் ஆசிட் ஆகிய விஷ வாயுக்கள் உபயோகிக்கப்படுகின்றன. சென்னை, பம்பாய் துறைமுகங்களில் அவ்வாறு விஷப்புகையடிப்பதற்கு விசேஷ வசதிகள் இருக்கின்றன.

அமிர்தசரசில் ஒன்றும் கல்கத்தாவில் ஒன்றுமாக இன்னுமிரண்டு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இந்நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிற தொற்றுத் தடை வேலையும், வெட்டுக்கிளித் தடை வேலையும் முதலாவது ஐந்து வருஷத் திட்ட வேலைகளில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

பருத்திச் செடியை நாசம் செய்கிற வெளிநாட்டுப் பூச்சியான "அமெரிக்கன் பேரல்விவில்" இந்தியாவுக்குள் புகுந்துவிடாமல் தடுப்பதற்காக, சென்னை, பம்பாய் ஆகிய இரு துறைமுகங்களைத் தவிர இதர துறைமுகங்களில் அமெரிக்கப் பஞ்சை இறக்குமதி செய்யக்கூடாதென்று தடை செய்திருக்கிறது. அந்த இரு துறை முகங்களிலும் வந்திறங்குகிற அமெரிக்கப் பஞ்சு செவ்வையாகப் புகையடிக்கப்பட்டுத் தொற்று நீக்கம் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 2,00,000 பேல் (400 பவுண்ட்) அமெரிக்கப் பஞ்சு இறக்குமதியாகிறது.

சீக்கிரமே கொச்சித் துறைமுகத்திலும் அமெரிக்கப் பஞ்சை இறக்குமதி செய்வதற்கு ஏற்றபடி வசதிகள் செய்யப்படும்.

### வெட்டுக்கிளித் தடை

வெட்டுக் கிளிப் பிரச்னையைச் சமாளிப்பதற்காக, தாவரப் பாதுகாப்பு டைரெக்டர் காரியாலயம் போதுமான சாதன வசதிகள் உள்ள ஒரு பெரிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏப்ரல் முதல் நவம்பர் வரையில்

வெட்டுக்கிளிப் பருவமாகும். இந்தக் கால அளவில் வெட்டுக்கிளிகள் சாதாரணமாய் இனவிருத்தியாகிற பாலைவனப் பிரதேசங்களில்—80,000 சதுர மைல் விஸ்தீரணம்—கண்டிப்பான கண்காணிப்பு இருந்து வரும். 87 கண்காணிப்பு நிலையங்களில் அவ்வேலை நடைபெறுகிறது. ரோந்து கோஷ்டிகள் ஜீப் கார்களிலும் ஒட்டகங்களிலும் ஏறிச் சுற்றிவரும். வெட்டுக்கிளி நடமாட்டத்தை அவை வெகு ஜரூராகக் கவனித்துவரும். வெட்டுக்கிளிக் கூட்டம் ஏதாவது தென்பட்டால், உடனே அதை அழிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தாழ்வாகப் பறக்கும் விமானங்களிலிருந்து விஷ மருந்து தெளிக்கப்படும். ஒரு கூட்டம் விட்டுவைக்கப்பட்டால் சுமார் மூன்று மாத காலத்தில் அது சுமார் 250 கூட்டமாகப் பெருகிவிடும். இதிலிருந்து அதன் ஆபத்தை உணர்ந்து கொள்ளலாம்.

வெட்டுக்கிளித் தடைக்கான சர்வதேச நடவடிக்கைகளில் இந்தியாவுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. வெட்டுக்கிளித் தடைப் போராட்டம் சம்பந்தமாக உதவி செய்யும் பொருட்டு, இந்திய நிபுணர் கோஷ்டிகள் மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்றிருக்கின்றன.

வெட்டுக்கிளிகளைப் போலவே, பயிர்களை நாசம் செய்யும் இதர சில ஜந்துக்களும் குறிப்பிட்ட கால வட்டத்தை அனுசரித்துப் படையெடுக்கின்றன. எலியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். சென்ற இரு வருஷங்களில், பெருந்திரளான எலிக்கூட்டங்கள் ராஜஸ்தான், போப்பால், மத்திய பாரத், ஆஜ்மீர் ஆகிய பிரதேசங்களில் காணப்பெற்றன. எலிகளை ஒழிப்பதற்கு, புகையடிப்பது, எலிப் பாஷாணம் வைப்பது, பொறி வைத்துப் பிடிப்பது ஆகிய முறைகள் நல்ல பலன் தருவனவாகும்.

நெருக்கடி காலங்களில் ராஜ்ய சர்க்கார்களுக்கு உதவி செய்வதற்காக எட்டு மத்திய தாவரப் பாதுகாப்பு சாதனத் திரள் மண்டலங்களை ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்தியா உணவு உற்பத்தியில் தீவிரமாய் ஈடுபட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், தாவரப் பூச்சிப்பொட்டுத் தடை விஞ்ஞானிகளும், தாவர வியாதித்தடை விஞ்ஞானிகளும் தானியங்கள் சேதமாகாமல் பாதுகாப்பதற்கு வழிசெய்வதன் மூலம் அரும்பணி ஆற்றிவருகிறார்கள்.

# சிவபெருமானின் ஆபரணங்கள்

ல. சண்முகசுந்தரம்

மனிதர்களை, நமக்கு வேண்டியவர்கள் - நம்மோடு நெருங்கி உறவாடுகிறவர்கள் ஒவ்வொருவரையும், நாம் இயல்பான பெயரை வைத்துப் பேசுவதில்லை. பட்டப் பெயர் ஒன்றை வைத்துத்தான் பேசுகிறோம். அப்படிப் பேசுவதின் மூலமாகத்தான் ஒரு தெளிவும் ரசமும் உண்டாகிறது.

தாய்க்குக் குழந்தையின் பெயர் ஞாபகத்தில் இருக்கத் தான் செய்கிறது. இருந்தாலும் குழந்தையை, 'என் தங்கமே, முத்தே, கண்ணே' என்று அழைப்பதில் தாய்க்கு ஒரு ரசம்.

நம்முடன் நெருங்கிப் பழகுகிற மாடு, பூனை, நாய் இவைகளையும் வேறு பெயர் வைத்து அழைக்கும்போது தனியான சுகம் உண்டாகிவிடுகிறது.

கம்பன் போன்ற மகா கவிஞர்கள் பாத்திரங்களை எந்த இடத்திலும் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறதில்லை. குணம், செயல் முதலியவற்றை வெளிப்படுத்துகிற பெயரைக் கொண்டுதான் பாத்திரங்களைப் பற்றிப் பேசுவார்கள்.

• • • •

ஒரு பொருளுக்கு அடையாளமாக வேறொரு பெயர் வந்துவிட்டதென்றால் அந்தப் பொருள் நன்கு வளர்ந்து விட்டது என்று ஏற்பட்டுவிடுகிறது. இனி அடையாளத்

திற்கும் அடையாளம் என்கிற ரீதியில் புனை பெயர்கள் ஏற்பட்டுவிட்டால் முதலில் குறிப்பிட்ட மூலப் பொருள் சமுதாயத்தில் பரிபூரணமாகப் பரந்து நிறைந்துவிட்டது என்று சொல்லிவிடலாம்.

சமுதாயம் ஓர் உண்மையை எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாகவும், விரிவாகவும் அனுபவிக்க முடிகிறதோ அவ்வளவுக் கவ்வளவு உண்மைக்கு அடையாளங்களும் புனை பெயர்களும் உண்டாகிவிடுகின்றன.

சைவ சமயம் முப்பதினாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே வளர்ந்து வந்திருக்கிறது. அறிதற்கரிய பல உண்மைகளையும் சாதனங்களையும் விளக்கிக் காட்டுகிறது சைவ சமயம். அடியார்கள், ஞானிகள், சித்தர்கள், இவர்கள் தங்களுடைய முயற்சிகள், அனுபவங்கள், சித்திகள், இவற்றையெல்லாம் சைவ சமயத்துக்குக் காணிக்கையாக அர்ப்பணித்திருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுக் கணக்காக வாழ்ந்து வருகிற மானிட ஜீவன்களின் இதயத் துடிப்பையும், ஆனந்தத்தையும் சைவ சமயத்திடத்தில் நாம் பார்க்கிறோம். ஒவ்வொன்றிலும் நம்பிக்கை தொனிக்கிறது.

* * * *

சிவபெருமான் என்றால் எங்கும் நிறைந்த வஸ்து; காலம் இடம் இவைகளைக் கடந்த பொருள், அந்த வஸ்துவுக்கு மூலம் என்றோ முடிவு என்றோ ஒன்றுமே கிடையாது. அப்படியானால் அந்த வஸ்துவை எப்படி எடுத்துச் சொல்வது? நம்மவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சிவபெருமானுடைய தலையில் சடை காடாக வளர்ந்து கிடக்கிறது. சடையில் கொன்றைப் பூக்கள் சிதறிக் கிடக்கின்றன. சடைக்குள்ளே பிறைச் சந்திரன் ஒளிந்து கிடக்கிறது. சடை நிறையக் கங்கை வேறு திமிறிக்கொண்டு

கிற்கிறது. இப்படி யெல்லாம் சொல்லியிருக்கிறார்கள் நம்மவர்கள்.

சடை, கொன்றை, பிறை, கங்கை ஒவ்வொன்றும் முடிவற்ற பரம்பொருள் தத்துவத்தை விளக்க வந்த அடையாளங்கள்தான்; அதிசயமான அடையாளங்களும் கூடத்தான்.

கொன்றைப் பூக்கள் என்றால் நட்சத்திரங்களை உணர்த்த வந்த புனை பெயர். அதே போல சிவபெருமானுடைய ஆபரணங்களில் பாம்பும் ஒன்று. பாம்பு என்றால் நட்சத்திரக் கூட்டங்களின் செறிவு காரணமாகத் தோன்றுகிறதே பாலாறு, (Milky way) அதை உணர்த்த வந்த புனை பெயர்தான். நம்முடைய காலடிமாட்டில் அடிக்கடி சந்திக்கிற சாரையோ, விரியனோ, கொம்பேறி மூக்கனோ அல்ல. கோடானுகோடி நட்சத்திரங்களின் சந்திப்பில் தோன்றுகிற ஒளி வெள்ளந்தான் இறைவன் அணிகிற ஆபரணம் என்றால் அவனுடைய முடிவற்ற தன்மை ஒருவாறு விளங்கும் அல்லவா? இனி பாடலைப் பார்க்கலாம்.

பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளை எயிற்ற—மெய்த்தவத்தோர்
ஆகத்தான் அம்பலத்தான் ஆரா அமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி.

[பத்தி-வரிசை வரிசையான; தகட்ட-ஒளிக் கோடுகள், நட்சத்திரங்களில் ஒழுங்கும் வகுப்பும் ஒளி கக்கும் தகடுகளாக இருக்கின்றன. கறை மிடற்ற-விஷத்தை வைத்திருக்கும் தொண்டை; நட்சத்திரங்களுக்கு இடைஇடையே உள்ள நீல நிறத் தோற்றம்; பைவிரியும் துத்தி-படத்தில் கிடக்கிற நட்சத்திரத் துளிகள். கவை நா—இரண்டாகப் பிளந்துள்ள நாக்கு; எயிற்ற-பல்களை. உடைய: பணி-பாம்பு.]

இனி சிவபெருமான் அதே பாம்பாபரணத்தை எங்கெங்கு அணிந்திருக்கிறார் என்று பார்க்கலாம்.

கரம் மருவு பொற்றொடியாம் காலிற் கழலாம்
பொருவிற் புயவலயம் ஆகும்—அரவரை மேல்
நாண் ஆம் அரற்கு நகைமணி சேர் தாழ்குழையாம்
பூண் ஆம் புனைமாலை யாம்.

[கரம் மருவு-கைகளில் அணிகிற; பொன்தொடி-ஒளி பொருந்திய வளையல்கள், பொருவில்-இணையில்லாத அரவு-பாலாருகிய பாம்புதான்; அரைமேல்-இடுப்பில் அரற்கு-சிவபெருமானுக்கு; நகைமணி சேர்-ஒளிமயமான ரத்தினக் கற்கள் பதித்தது போன்ற; குழை-குண்டலம்; பூண்-மோதிரம்,]

பாம்பாபரணத்தை எல்லா இடத்தோடும் சார்த்திச் சொல்லும்பொழுது சிவ தத்துவத்தின் வரம்பில்லாத தன்மை ஒருவாறு விளங்கும்.

# மனித உரிமையைக் காக்கும் சட்டம்

பிரிட்டனின் ஆதிக்கப் பிராந்தியக் கடலில் ஓடிக் கொண்டிருந்த கப்பலில் சிறைப்பட்டிருந்த ஒருவனை விடுதலை செய்து நியாயஸ்தலத்தில் கொண்டு வருமாறு சமீபத்தில் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சிறைப்பட்டிருந்த அந்த மனிதன் பிரிட்டனிலிறங்கி அடைக்கலம் கோர விரும்பினான்.

நியாயமின்றி ஒருவன் சிறைப்பட்டிருந்தாலும், சட்ட பூர்வமாகவே அவன் சிறைப்பட்டிருந்தாலும், அவனுக்கு நேர்மையான நியாயம் கிடைக்கவில்லையென்றோ, அவனுடைய உரிமைகளைக் காக்க வேண்டுமென்றோ நீதிஸ்தலத்தில் முறையிடவும், அவனை நீதிஸ்தலத்திற்குக் கொண்டு வந்து விசாரித்து நியாயம் வழங்கக் கோரவும் 'ஹேபஸ் கார்ப்பஸ்' உத்தரவு (ஆட்கொணர் சட்டம்) கோரலாம். சர்க்காருடைய தீர்ப்பை எதிர்த்தும், அதிகாரிகளின் நடவடிக்கைகள் மீதும் இந்த உத்தரவு கோர சமூகத்திற்கு உரிமையுண்டு.

யுத்த காலங்களில் தேசியப் பாதுகாப்பை உத்தேசித்து இந்தச் சட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தற்காலிகமாகச் செயலற்றதாகச் செய்ய பிரிட்டிஷ் பாராளுமன்றம் சம்மதித்தது. ஆனால் கொள்கையைக் கைவிடவில்லை. சட்டத்தின் ஆதரவின்றி எவரையும் கைது செய்யவோ சிறைப்படுத்தவோ அனுமதிக்கவில்லை.

சட்டபூர்வமான தாக்கீது இன்றி எவராவது கைது செய்யப்பட்டால் ஆட்கொணர் சட்ட (ஹேபஸ் கார்ப்பஸ்) உத்தரவு மூலம் கைதியை நீதிஸ்தத்தில் 'ஆஜர்' செய்ய வேண்டுமென்று நியாயாதிபதி, சிறைப்படுத்தியவருக்கு உத்தரவு பிறப்பிக்கலாம். குறிப்பிட்ட நாளில் நீதிஸ்தலத்தில் கைதியை 'ஆஜர்' செய்து, அவனைக் கைது செய்த காரணத்தைக் கோருமாறும் கேட்க முடியும். இந்த உத்தரவை எதிர்ப்பது சட்ட விரோதமாகும். இந்த உத்தரவைக் கோரி, ஒரு நீதிபதி அதைப் பிறப்பிக்க மறுத்தால் அவர் குற்றம் செய்தவராகிறார். அவருக்கு 500 பவுன் அபராதம் விதிக்கிறது ஆங்கிலச் சட்டம்.

ஆட்கொணர் சட்ட (ஹேபஸ் கார்ப்பஸ்) உத்தரவு மனித உரிமையைக் காப்பதற்காக அமைந்த சிறப்பான ஏற்பாடு என்கிறார் பேராசிரியர் W. S. ஹோல்ட்ஸ்வர்த். பாராளுமன்றத்திற்கும் அரசுக்கும் நீண்டகாலமாக ஏற்பட்டிருந்த தகராறினால், சிறுகச் சிறுக உருவானது இந்தப் பாதுகாப்பு.

ஒரு மனிதன் குற்றவாளியா அல்லவா என்று நிர்ணயிக்க இந்தச் சட்டம் உதவுவதில்லை. ஒரு மனிதனுக்குச் சட்டபூர்வமாகத் தன்னுடைய கட்சியை எடுத்துக் கூறும் வாய்ப்பளிக்கவும், தகாத முறையில் அவன் அடைபட்டுக் கிடந்தால் விடுதலையளித்துச் சட்டபூர்வமான விசாரணை நடத்தவும் இந்தச் சட்டம் உதவுகிறது. சிறைப்பட்ட மனிதனை நீதிஸ்தலத்தில் 'ஆஜர்'படுத்திய பிறகு, அவன் மீது நடவடிக்கை எடுக்கவோ, விடுதலை செய்யவோ, அல்லது ஜாமீன்பேரில் அவனை விடுதலை செய்யவோ, சட்டபூர்வமான விசாரணை நடக்கும் வரையில் சிறையிலிருக்குமாறு பணிக்கவோ நீதிபதி உத்தரவு பிறப்பிக்கலாம். சிறைப்படுத்தியதை அம்பலப்படுத்தி விசாரணைக்குக் கொண்டு வருவதே சட்டத்தின் முக்கிய நோக்கம்.

மகாசாஸனத்தில் மன்னன் ஜான் கையெழுத்துச் செய்யும் நிர்ப்பந்தம் கி. பி. 1215 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போதே மக்களுடைய உரிமைகளைக் காக்கச் சட்டங்களும் தோன்றிவிட்டன. ஏறக்குறைய இந்தச் சட்டத்தின் மூலமும் அப்போதே தோன்றிவிட்டதெனக் கூறலாம். "சட்ட சம்மதமின்றி எந்த மனிதனையும் (சுதந்தரமான பிரஜையையும்) சிறைப்படுத்தவோ, நாடுகடத்தவோ, வேறு வழிகளில் தடை செய்யவோ கூடாது" என்ற வாக்கியம் அதில் காணப்படுகிறது. பிற்காலத்தில் சட்டம் உருவாயிற்று.

பிரிட்டனில் எல்லாக் காலத்திலும் இந்தச் சட்டம் மதிக்கப்பட்டது என்று சொல்வதற்கில்லை. முதல் சார்லஸ் மன்னனது கொடுங்கோலாட்சியில் இது புறக்கணிக்கப் பட்டது. சட்ட விரோதமாகக் கைதான பிரஜைகள் இந்தச் சட்டத்தின் மூலம் நீதி கோர முடியவில்லை. நீதிபதிகள் நடவடிக்கை எடுக்கத் துணிந்தபோது, சட்டம் பிரயோகமாகாத வெளிநாடுகளுக்குச் சர்க்கார் கைதிகளை அனுப்பிற்று.

பாராளுமன்றம் 1679 ஆம் ஆண்டில் ஹேபஸ் கார்ப்பஸ் சட்டத்தை நிறைவேற்றிற்று. இதற்குப் பன்னிரண்டு வருஷ காலம் பிரயாசை ஏற்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தச் சட்டத்தில் சில குறைகள் இருப்பது தெரிந்தது. 1816 இல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. காலனிகளிலோ, ஆதிக்கப் பிரதேசத்திலோ இதே மாதிரிச் சட்டம் அமலிலிருந்தால், அங்கு செல்லுபடியாகும்படி, இங்கிலாந்திற்கு வெளியே பிரயோகிக்குமாறு ஆங்கில நீதி ஸ்தலம் இந்த உத்தரவைப் பிறப்பிக்கக் கூடாது என்று 1862 இல் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்காட்லந்தில் ஹேபஸ் கார்ப்பஸ் சட்டத்திற்கு இணையானதொரு சட்டமிருப்பதால், இங்கிலாந்துச் சட்டம் அங்கு செல்லாது. இந்தச் சட்டத்தினால் மனித உரிமைகளைப்பற்றிய பல விரிவுரைகள் நீதிஸ்தலங்களில் பதிவாகியுள்ளன. உரிமை கோரி வாதாடும்போது சட்டமும் நீதியும் இழைந்து நிற்க, சிறந்ததொரு உபன்யாசம் கிடைத்துவிடுகிறது. ஜனநாயகப் பண்புக்கும் வாழ்க்கைக்கும் பாதுகாப்பாக அமைந்துள்ளது இந்த உரிமைச் சட்டம். இதனால் நீதியும் நேர்மையும் தழையவும், மனிதன் நிர்ப்பயமாகவும் சட்டத்தை மதித்து வாழவும் சாத்தியமாகிறது.

# கொடுத்த பணம்

"உதயன்"

ஊரே கந்தப்ப முதலியாரைத் திட்டி வாரிக் கொட்டியது. 'கொஞ்சமா நஞ்சமா இருபதினுயிரம் ரூபாயையுமல்லவா வாயில் போட்டுக் கொண்டான்' என்று பணம் கொடுத்தவர்கள் மட்டுமல்ல, பணம் கொடுக்காதவர்களும் கண்டபடிப் பேசித்தீர்த்தார்கள். வட்டியை எண்ணி முதலைக் கொடுத்தவர்களின் ஆசையை மண்ணுக அடித்தது கந்தப்ப முதலியாரின் நோக்கமல்ல. ஊராரின் பணத்தை வாங்கித் தின்று விட்டுக் கை விரிக்க வேண்டுமென்று முதலியார் எண்ணியிருந்தவருமல்ல. ஆனுல், இத்தனை பேரின் ரூபாயையும் 'வாயில் போட்டு'க் கொள்ளுவானேன்?

கந்தப்ப முதலியாரின் கண்ணியத்திற்காகக் கைமாற்றுகக் கடன் கொடுக்கலாம். அப் பேர்ப்பட்ட மனிதர். சொன்ன சொல்லுக்குக் கட்டுப்பட்டவர். பாண்டும் பத்திரமும் அவர் விஷயத்தில் அவசியமில்லை. அவர் குடும்பமே நாணயத்திற்குப் பேர் போனது. அப்படிப்பட்டவரின் கதிதான் ஊராரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் நடுவில் மானங்கெட நிற்கவேண்டியதாயிற்று. கடன் படுத்தும் பாடல்ல; அது அவர் வாழ்வில் ஏற்பட்ட நொடி.

கந்தப்ப முதலியார் பரம்பரையாகத் துணி வியாபாரம் செய்து வருபவர். அது தவிர, அவருக்குச் சொந்தமாகக் கொஞ்சம் நஞ்சையும், சில காணிப் புஞ்சை நிலமும்

இருந்தன. ஊரில் கந்தப்ப முதலியாரின் செல்வாக்கு நல்ல மதிப்போடு இருந்தது. அவரால் வாழ்வு பெற்றவர்கள், உதவி பெற்றவர்கள் நல்ல நேரத்தில் அவரை நினைத்துப் பார்ப்பார்கள். அப்படிப்பட்ட மனிதருக்குக் கெட்ட காலம் எதிர்பாராமல் வந்து சேர்ந்தது.

ஊரின் சுற்றுப் பக்கத் தறிக்காரர்களெல்லாம் கந்தப்ப முதலியாரிடம்தான் நூல் வாங்குவது, முன் பணமாகக் கடன் வாங்குவது, செய்த துணியைக் கந்தப்ப முதலியாரிடம் கொடுத்துக் கடனைக் கழிப்பது, இப்படிப்பட்ட வியாபாரத்தில் கந்தப்ப முதலியார் முன் தொகையாகக் கொடுக்கும் பணம் எத்தனையோ கைத் தறிக் குடும்பங்களைக் காப்பாற்றி வந்தது. நூறோ, இருநூறோ அவர் ஆளைப் பார்க்காமல் கொடுத்துவிடுவார். தறியிருக்கிறது, நல்ல தொழிற்காரன் பணத்தைத் திருப்பித் தந்துவிடுவான் என்ற நம்பிக்கைதான் அவர் முன்பணம் கொடுப்பதற்கு ஈடு. கந்தப்ப முதலியாரின் இந்தப் போக்கு யாருக்குமே புரியாது. அவர் மனைவிக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காதது!

"வட்டியுமில்லாமே பாண்டு மில்லாமே இப்படிக் கொடுத்தால் இந்தப் பணமெல்லாம் போற கதி என்ன?" என்று அவர் மனைவி எச்சரிப்பாள்.

ஆனால் அதற்கெல்லாம் அவர், "பிழைச்சுப் போறான்கள் போ. நாம் என்ன போறபோது தலையிலா வாரிக் கட்டிக் கொண்டு போகப் போகிறோம்" என்று சமாதானப் படுத்துவார். இந்த ஒன்றுக்கும் உதவாத வேதாந்தத்தை அந்த அம்மாளுக்குக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போய் விட்டது.

"அவருக்கு இந்த ஒரு வாரமாக் காய்ச்சலுங்கோ. தறி போடமுடிய வில்லை. சரியான கஞ்சி காய்ச்சக் கூட

வழியில்லை. கொஞ்சம் மனசு வைத்து ஓர் அஞ்சு ரூபாய் கொடுங்க" என்று ஒரு பெண் வந்து நிற்பாள். முதலியார் அப்பொழுதுதான் வண்டியில் சந்தைக்கு ஜவுளி ஏற்றிக் கொண்டிருப்பார். உடனே தன் மடியிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுப்பார். இப்படி முதலியாரின் பணம் ஐந்தும் பத்துமாகப் பல ஏழைகளின் கஞ்சிக்கும், மருந்துக்குமாகப் போய்க் கொண்டிருந்தது.

என்றைக்குமே முதலியார் கொடுத்த கடனை வாய் திறந்து கேட்டவரல்ல. அவர்களாகவே திருப்பிக் கொடுத்தால் உண்டு. மாதம், வருஷக்கணக்கில் நின்று போய், என்றோ ஒரு நாள் திரும்பிவருவதும் உண்டு. அநேகமாக முதலியார் இந்தப் பணத்தை எதிர்பார்ப்பதேயில்லை. அவரது ஜவளி வியாபாரமும் பரம்பரைக் காணி நிலங்களும் தான் அவர் குடும்பத்தையும், பரோபகாரத்தையும் வாழ வைத்துக் கொண்டிருந்தன. அந்த இரண்டின் வருவாயுமே படுத்துப் போகவேண்டிய காலம் வருமென்று அவர் என்றுமே எதிர்பார்த்ததில்லை.

மண்ணை நம்பிக் கிடந்தவர் 'வயிற்றிலெல்லாம் அடிப்பதற்கு' வானம் ஒன்றே போதும். வாரிவிட்ட கையில் ஒடு எடுப்பதற்குக் கால மழை பொய்த்து விட்டது. ஒரு வருஷமா, இரண்டு வருஷமா, சேர்ந்தாற்போல் ஏழு வ்ருஷங்கள். சிறிது தூரலை நம்பி விதைக் கம்பைத் தெளிப்பார்கள். மறுபடியும் ஐப்பசியில் சிறிது தூரல் காட்டும். கடனை வாங்கியோ தன் மனைவின் தாலியை அடமானம் வைத்தோ பின்னும் நிலத்தை உழுது விதையைத் தெளிப்பான். அதுவும் அவன் நெஞ்சங் கருகத் தீய்ந்து விடும். இந்தக் கொடுமையே கந்தப்ப முதலியாரின் காணியிலும் நடந்தது. புஞ்சையில் வேலி கூட இல்லை. நஞ்சையில் நல்ல விளைச்சலேயில்லை. அதிலே விளைச்சலைவிட வீணனதுதான்

அதிகம். இந்தக் கஷ்டகாலத்தில் வற்றுத கையாகி வந்த ஜவுளி வியாபாரமும் படுக்க ஆரம்பித்து விட்டது. சந்தையில் இவரது கைத்தறி ஜவுளி எடுபடாமல் போய்விட்டது. அவரது பச்சாம்பாளையம் புடவை, கொண்டிப் பட்டி சுங்கடிச்சேலை, செவந்திபாளையம் மயில்கண் வேஷ்டி இதையெல்லாம் ஏனென்று கேட்பாரில்லை. பஞ்சத்திலும் தொழில் முடக்கத்திலும் பணப் புழக்கம் குறையும் பொழுது ஜனங்கள் முதலியாரின் நல்ல சரக்கையா பணம் கொட்டி வாங்குவார்கள்? மலிவான விலையில் வந்து கிடக்கும் மில் துணிகளை இரண்டொன்று வாங்கிக் கொண்டு போவதைப் பார்த்து முதலியார் தன் ஜவுளி ரகங்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுவார். அவரது வாடிக்கைக்காரர்களெல்லாம் தலைகாட்டாமல் மறைந்தார்கள். முதலியாரின் தொழில் சுணக்கம் கண்டுவிட்டது. விலையாகாத ஜவுளிகள் மூலையில் தூங்கின. முதலியார் ஏதோ சாப்பிடுவதும், முற்றத்துத் தூணில் சாய்ந்து உட்காருவதும் பொழுதாகப் போய்விட்டது.

“முத்தைய கோனுன் பெண் கல்யாணத்திற்கு வந்து இருநூறு ரூபாய் கைமாற்று வாங்கிக் கொண்டுபோய் எத்தனை வருஷமாச்சி? அவன் இப்பொழுதுதான் நெல் வியாபாரம் மும்முரமாய் நடத்துருனே. வாங்கிய பணத்தை அவனுகத்தான் கொடுக்காது போனுலும் நாமாவது கேட்க வேண்டாமா? நம்முடைய கஷ்ட காலத்துக்கு நம்ம பணம் உதவாமல் போனுல் நம்ம குஞ்சு குழந்தை போற கதி என்னவாவது?” என்று முதலியாரின் மனைவி அவரை நச்சரிப்பாள்.

“அவன் கிட்டேயுந்தான் எங்கே பணமிருக்கப் போவுது? பணமிருந்தால் அவனுக வந்து கொடுத்துவிட மாட்டானு?” என்பார் முதலியார்.

முதலியாரின் நல்ல மனசு மாறவில்லை. ஆனால் நல் வாழ்வு தத்தளித்தது. பூமியில் வருவாயில்லை. ஜவுளி வியாபாரத்தில் செல்லாக்காசு வியாபாரங் கூட இல்லை. அவர் கவலையில்லாமல் வாழ்ந்த காலத்திலே வீடுகட்டு வதற்கும், பெண் கல்யாணத்திற்கும் வாங்கிய கடன்கள் கொடுபடாமல் நின்றுவிட்டன. முதலியாரின் கஷ்ட காலத்திற்குத் தகுந்தாற்போல் கடன்காரர்கள் தங்கள் பணத்திற்கு நெருக்குகிறார்கள். முதலியார் கொடுத்த பணத்திற்குப் பாண்டுமில்லை; பத்திரமுமில்லை. ஆனால் அவர் வாங்கிய பணத்திற்கு எல்லாமே இருந்தன. கடன் எல்லாமாகச் சேர்ந்து இருபதினாயிரம் ரூபாய்க்குப் பக்க மாக இருந்தது. இத்தனையையும் கட்டி எப்படித் தீர்ப்பது? வாசலில் வந்து நிற்கும் கடன்காரர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. முதலியாரின் மனைவியோ தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தாள். அவள் நல்ல செல்வாக்குள்ள குடும்பத்திலிருந்து வந்தவள். முதலி யார், குடும்பத்தைக் கொண்டுவந்துவிட்ட வழி, அவளுக் குப் பெரும் ஏமாற்றமாகப் பட்டது.

ஒரு நாளா, இரண்டு நாளா? தினமும் பொழுது விடிந்தால் போதும், கடன்காரர்கள் வந்து மொய்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கடனை யெல்லாம் எப்படித் தீர்ப்பது? நகை நட்டை விற்று முடிந்த அளவு கட்டினார். அப்படிக் கொஞ்சம்; பாக்கி நின்ற பெரிய கடனை யெல்லாம் தீர்ப்பதற்குக் காணியெல்லாம் போச்சு. மீதி நின்ற கடனைத் தீர்ப்பதற்கு அவரிடம் ஒன்றுமில்லை. மனமிடிந்து உட்கார்ந்துவிட்டார்.

முதலியாருக்குக் கடன் கொடுத்தவர்களெல்லாம் வட்டிக்கும் முதலுக்குமாகக் கடன் கொடுத்தவர்கள். ஒரு நல்ல மனிதருக்கு உதவக் கொடுத்த பணமல்ல. கொடுத்த

முதலும் வட்டியும் ஆச்சு போச்சு என்ற நிலைமைக்கு வந்தது. கடன் கொடுத்த நெஞ்ச மெல்லாம்பற்றி எரிய ஆரம்பித்தன. பற்றி யெரிந்த நெஞ்சங்கள் முதலியாரின் மிஞ்சிய சொத்தாகிய வீட்டின் மேல் ஜப்தி கொண்டு வரவும் ஏற்பாடு செய்தன.

"அந்தக் கோனையாவது கேட்டுப் பாருங்களேன். நம்ம கஷ்டத்தைப் பார்த்தாவது கொஞ்சம் கொடுக்க மாட்டானா?" என்பாள் மனைவி.

"வரும் பணமாக இருந்தால் அதாகவே வராதா?"

"நம்ம கிட்டே எத்தனை பேர் கடன் வாங்கினார்கள்; அவர்களில் ஒருவனாவது நம்மை என்னவென்று கூட எட்டிப் பார்க்கவில்லை!"

"பிழைச்சுப் போகிறார்கள் போ"

"நீங்கள் கொடுத்த பணத்திற்கு ஒருத்தரையும் நீங்கள் வாய் திறந்து கேட்க வேண்டாம். நாம் வாங்கின பணத்திற்கு எத்தனை ஏச்சும் பேச்சும். வெளியிலே தலை காட்டமுடியவில்லை. மானம் போகுது"

"அதற்காக நாம் என்ன செய்ய முடியும்?"

தினம் தினம் அவர்களின் பேச்சு இதாகத்தானிருக்கும்; இப்படித்தான் முடியும்.

ஊரில் முதலியாருக்கு ஏற்பட்ட தாழ்வை, பணம் கொடுத்த மகராசன்களெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. அவரை ஏனென்று எட்டிப் பார்ப்பாரில்லை. இந்த நிலையில் முதலியாருக்கு வாழ்வு வெறுத்துப் போய் விட்டது. ஆனால் அதற்காக உறக்கந்தட்டி உட்கார்ந்து விடவும் இல்லை. குழந்தை குட்டிகளையெல்லாம் விட்டு எங்கேயாவது கண் மறைவான இடத்திற்குக் கடன்காரர்கள் இம்சையே படாத உலகத்திற்கு ஓடிவிடலாம் என்று எண்ணவும்

இல்லை. தான் பெற்ற குழந்தைகளுக்காகவாவது வாழ வேண்டும் என்று மான அவமானம் யாவையும் சகித்துக் கொண்டு வாழ்ந்தார்.

முதலியாரின் குடும்ப நிலை பார்க்கப் பரிதாபமாயிருந்தது. ஆனால் அதைப் பார்த்தவர்களுக்கு நெஞ்சில்லை. கிழங்கு போலிருந்த அவரது குழந்தைகள் வாடிவிட்டன. அவர் மனைவி ஒரு சுற்று இளைத்துக் கூடப் போய் விட்டாள். முதலியார் தலைச் சுமையாக ஜவுளியைத் தூக்கிக்கொண்டு வீதி வீதியாக, சந்தை சந்தையாகச் சுற்ற ஆரம்பித்தார். விற்காது திரும்பியபொழுதெல்லாம் குடும்பம் அரைப் பட்டினியாக, முழுப்பட்டினியாகக் கிடந்தது. பிச்சையெடுக்காத குறை; மானம் போகாத நிலை.

சோர்ந்து இருண்டு போன முதலியாரின் முகத்திலே சிரிப்பு சில சமயங்களில் கொப்பளிக்கும். அது அவரைச் சுற்றியுள்ள மனிதர்களின் மனப் போக்கை நினைத்துப் பார்க்கும்போது வரும். ஒரு காலத்தில் தம் உப்பையும் தண்ணீரையும் தின்று கிடந்தவர்கள் கூட அவரைத் தூற்றுகிறார்கள். அவர் பட்ட கடனை வட்டியும் முதலுமாய் வாங்கி விட்டார்கள். ஆனால் அவர் கொடுத்த பணத்திற்கு வழியில்லை!

மனைவி காய்ச்சலாய்க் கிடந்தாள். எப்படியாவது இரண்டு துண்டாவது விற்றுவிட்டுத்தான் வீடுதிரும்புவது என்று வீதி வீதியாய் அலைந்தார். கையில் காசில்லாமல் வீடு போய் என்ன செய்வது? மருந்துக்கும் கஞ்சிக்கும் ஒரு வழி காண வேண்டாமா? கத்திக் கத்தி அலைந்ததுதான் மிச்சம். பொழுது சாய வெறுங்கையாய் வீடு திரும்பினார். தலைச் சுமையை வீட்டு வெளித்திண்ணையில் போட்டுவிட்டு, கம்பத்தில் சாய்ந்து உட்கார்ந்தார். "முருகா இப்படியும்

விட்டுவிட்டாயே" என்று அவர் மனம் எண்ணி உளைந்து கொண்டிருந்தது. அப்பொழுதுதான் ஒருவன் அவரைத் தேடிவந்தவன் போல் மடியைப் பிரித்து ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

கந்தப்ப முதலியார் தயக்கத்தோடு," நீ யாரப்பா?" என்று கேட்டார்.

"நான்தான் ரங்க நாயக்கன்; என்னை அடையாளம் தெரியல்லீங்களா?"

"அட யாரு? முத்தா நாயக்கன் மவனா? வாப்பா இப்படி உட்கார். எப்போ வந்தாய்? எல்லாம் சௌக்கியமா?"

"எல்லாம் உங்க புண்ணியத்திலே சௌக்கியம் தானுங்கோ. இன்னிக்குத்தான் ஊருக்கு வந்தமுங்கோ. நீங்க அந்தப் பணம் நூறு ரூபாய் கொடுத்து உதவலேன்னா இவ்வளவு தூரம் வந்திருக்க முடியாதுங்கோ. நல்ல சமயத்திலே பணங் கொடுத்து உதவத்தான் துங்கபத்திரா அணைக்கட்டுலே போய் வேலை செய்து நாலுகாசு சம்பாதிக்க முடிஞ்சுது"

"அது கெடக்குது. இப்படி உட்காரு," என்று வற்புறுத்தினார் முதலியார். ரங்க நாயக்கன் உட்கார்ந்து, பணத்தை நீட்டினான். முதலியார் பணத்தை வாங்கிப் பார்த்தார். நூற்றிருபது ரூபாய் நோட்டுக்கள்!

"இந்த இருபது ரூபாய் எதுக்கு?"

"கொடுத்த பணத்துக்கு வட்டியுங்கோ."

"அட அது கெடக்குது. நான் பணம் வட்டிக்கா கொடுத்தேன்? இந்தா இதை எடுத்துக் கொள்" என்று அந்த இருபது ரூபாயையும் திருப்பிக் கொடுத்துவிட்டார் முதலியார்.

# தொழில் பெருக அணுசக்தி

அணுசக்தியினுல் மின்சார உற்பத்தி செய்வதைக் கனவாகக் கருதிய காலம் மாறிவிட்டது. அதிசீக்கிரத்தில் அணுசக்தியால் இயங்கும் நிலையங்கள் மின்சார உற்பத்தி செய்யத் துவங்கிவிடும். இனி, கரி—எண்ணெய்த் தட்டுப் பாடு ஏற்படுமே என்ற பயம் நீங்கிவிட்டது. ஆக்கவேலை களுக்கு அணுசக்தி அற்புதமான சேவை செய்யும். அத ஞல் தொழிலபிவிருத்தி பிரமிக்கத்தக்க அளவிலிருக்கும்.

அணுசக்தியை ஒரு வரப்பிரசாதமாகக் கொள்ளல் வேண்டும். ஜலவாயுவின் அழிக்கும் சக்தியைக் கண்டு நாம் பயப்படுவதுபோல அணுசக்தியின் ஆக்க சக்தியைக் கண்டு நாம் பிரமிக்கிறோம். பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளில் தொழில் வளமேற்பட்டுச் சுபிட்சம் பெருக அணுசக்தி பெரிதும் பயன்படும். யுத்தம் தவிர்க்கப்பட்டு, உலக மக்களிடையே நட்பும் உறவும் பெருகி, அமைதி நிலவ ஆரம்பிக்கும்போது மக்களுடைய வாழ்க்கைத்தரமும் உயருவது அவசியம். குறிப்பாக, பின்தங்கிய நாடுகளில் மக்களின் வாழ்வு பெருகவேண்டும். சுபிட்சம் பெருக, மின்சாரசக்தி சுலபமாக உதவி செய் கிறது. மலிவாகவும் தாராளமாகவும், ஒரு நாட்டில், மின் சாரசக்தி கிடைத்தால் தொழிலும் வாணிபமும் பெருகும். இதனுல் மக்களுடைய வாழ்க்கை நிலையும் உயரும். இது அனுபவத்திலேற்பட்ட உண்மை.

மின்சார உற்பத்திக்கு நிலக்கரியும் எண்ணெயுமே எரிபொருள்களாக இருந்தன. இவ் வெரிபொருள்களைக்

கொண்டு மின்சார உற்பத்தியும் அபரிமிதமாகிவிட்டது; தொழில்துறையிலும் அற்புத முன்னேற்றமேற்பட்டது. ஆனால் என்றோ ஒரு நாள் நிலக்கரிப் பஞ்சமேற்படக் கூடும். அப்போது மின்சார உற்பத்திக்கு வேறு எரி பொருள்களைத்தேடும் நிலைவரும். நல்ல வேளையாக, இனி அந்தப் பிரச்னை ஏற்பட வழியில்லை. மின்சார உற்பத்திக்கு அணுசக்தி பயன்படுமென்பதைச் செயலாற்றும் தருணம் வந்துவிட்டது. உலகம் முழுவதும் சுபிட்சம் பெருக, மின்சார உற்பத்தியும் பெருக வேண்டும்.

வல்லரசுகளின் வலிமைக்குப் பொருளாதார சுபிட்சமே காரணம். அந்த நாடுகளில் தொழில் வளமுண்டு. அதற்கு முக்கியக் காரணம் எண்ணெயும் நிலக்கரியுந்தான்: ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இன்னும் நூறு வருஷங்களுக்குள் நிலக்கரிப் பஞ்சம் வந்துவிடும். பின் தங்கிய நாடுகளிலும் துரிதமாக முன்னேற்றம் காண வேண்டுமானல், தொழில்வளம் — மின்சார உற்பத்தி— பெருக வேண்டும். இப்போதுள்ள நிலைமையில் அணு சக்தி ஒன்றே மின்சார உற்பத்திக்குச் சாதகமானது; துரிதமாகவும் சுலபமாகவும் மலிவாகவும் உற்பத்தி செய்ய உதவக் கூடியது. அணுசக்தி உற்பத்திக்கான கச்சாப் பொருள்களும் ஏராளமாகக்கிடைக்கிறது. இந்தக் கச்சாப் பொருள்களை இடத்துக்கு இடம் மாற்றுவதும் சுலபம். நிலக்கரியை ஏற்றுமதி செய்வதிலுள்ள சிரமம் இதில் கிடையாது. காட்டிலும் பாலைவனத்திலும்கூட அணு சக்தியினல் மின்சார உற்பத்தி செய்ய நிலையங்களை நிறுவுவது சுலபம். இப்போதுள்ள முக்கியப் பிரச்னை யந்திர வசதிதான். அணுசக்தி நிலையங்களை நிறுவ ஏராளமான பொருள் செலவு நேரிடுகிறது. நுட்பமான புது யந்திரங்களை அமைக்க நேரிடுகிறது.

ஆனால் இந்தப் பிரச்னை நீடித்திருக்காது. பிரிட்டன் அமெரிக்கா போன்ற பெரிய நாடுகள் அதிசீக்கிரத்தில் யந்திரத்தட்டுப்பாட்டைத் தீர்த்துவிடும். அணுசக்தி, மின் சார நிலையங்களுக்குத் தேவையான யந்திர சாதனங்களை உற்பத்திசெய்து உலகநாடுகளுக்கு இந்தப் பெரிய நாடுகள் விற்பனைசெய்து உதவும்.

வாழும் வாழ்வில் உன்னையும் நீ
மறந்து வாழ வேண்டுமடா!
ஏழையாகி எளியவரின்
எளியனாக வேண்டுமடா!
தோழனாகி யாவர்க்கும்
தொண்டனாக வேண்டுமடா!

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# பாஞ்சாலப் பழங்கதைகள்

ஷம்ஷீர் சிங் நருலா

கதைகள் என்றால் பாஞ்சால மக்களுக்கு மிகவும் பிடிக்கும்; அவைகளைக் கேட்டு அவர்களுக்கு ஆனந்தமும் ஆர்வமும் பொங்கும். பாஞ்சாலக் கதைகளில் பல கதைகளுக்கு ரிக் வேதம், மகாபாரதம், பஞ்சதந்திரம், ஜாதகக் கதைகள் முதலியவை மூலாதாரமாக இருக்கின்றன.

பாஞ்சால கிராமியக் கதைகளில் மிகப் புராதனமானவை அமானுஷிக பலம் பெற்றுள்ள வீர தீரர்களைப் பற்றியவை. நாச சக்திகளை அவர்கள் எவ்வாறு போராடி வெற்றி கண்டார்கள் என்பதை அக்கதைகள் விவரிக்கின்றன. அத்தகைய கதைகள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளில் மிகவும் பிரபலமானது ராஜா ரிசாலு கதைதான். ரிசாலு வரலாறு ஒரே கதையல்ல; பல கதைகளின் தொகுப்பு. அக்கதைகளின் வரிசைமுறை பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும். பொதுப்பட வழங்கும் கதை வருமாறு:

### ராஜா ரிசாலு

சாலிவாகன மகாராஜாவுக்கு ராணி அச்ரா, ராணி லோனா என்று இரண்டு மனைவிகள் இருந்தார்கள். மூத்த ராணி அச்ராவுக்கு, பூரண் என்ற பெயருள்ள அழகான மகன் ஒருவன் இருந்தான். இளையராணி லோனாவுக்கு எவ்வளவோ வருந்தித் தவமிருந்தும் குழந்தையே இல்லை. அதனால் அவள் மனம் கசந்து போயிருந்தாள். அவளுக்குப்

பொறுமையும் ஏற்பட்டது. பூரண் மிகவும் அழகான ராஜ குமாரனாக வளர்ந்து வருவதைப் பார்த்து அவள் அவனைப் பற்றி ராஜாவிடம் கோள் சொல்லி, ராஜா அவனை வெறுக்கும்படிச் செய்துவந்தாள். பூரண் தன் மீது ஆசை கொண்டு தகாதபடி நடந்ததாகக் கூட அவள் அபாண்டம் சுமத்தினாள். கோபங்கொண்ட ராஜா பூரணனின் கைகளை யும் கால்களையும் வெட்டி அவனைக் கிணற்றில் தள்ளி விடும்படி உத்தரவிட்டான். அவ்வழியாகச் சென்ற குரு கோரக்நாத் பூரணனைக் காப்பாற்றி, அவனுக்குக் கைகளும் கால்களும் மீண்டும் முளைக்கும்படிச் செய்தருளினார். தன்னைக் காப்பாற்றியதற்காக அவரிடம் நன்றி கொண்ட பூரண் தன் வாழ்நாளைப் பகவத் தியானத்திலேயே கழித்து விட முடிவுகட்டினான்; துறவிக் கோலம் பூண்டான்; ராஜ குமாரன் பூரண், பக்த பூரண் ஆனான். அவன்தான் பூரண் பகத்.

பல காலம் சென்று பூரண் பகத் தன் ராஜ்யத்துக்குத் திரும்பியபோது தன்னைத் தேடி வருந்தி அழுதமையால் தன் தாய் கண்ணிழந்து குருடியாய்விட்டதையும், தான் ஓடி விளையாடிய உத்தியாவனம் வாடிக் கரிந்துவிட்டிருப்ப தையும் கண்டான். உடனே அவன் தன் தவ வலிமையால் தன் தாய்க்குக் கண் பார்வை கிடைக்கும்படியும், உத்தியா வனம் முன்போல் பூத்துச் செழிக்கும்படியும் செய்தான். தன் சிற்றன்னை பேரில் அவனுக்கு வெறுப்பே இல்லை. எனவே, அவன் அவளுக்குக் குழந்தை பிறக்க வேண்டு மென்றும் வாழ்த்தினான். அவளிடம் அவன் ஓர் அரிசியைக் கொடுத்து உண்ணும்படிக் கூறினான். அவளுக்கு மிகவும் பலவானான மகன் பிறப்பானென்றும், பன்னிரண்டு வருஷம் ராஜா அக்குழந்தையைப் பார்க்காமலிருந்தால் அவன் மிகவும் புகழ் பெற்ற ராஜகுமாரன் ஆவா னென்றும் பூரண் பகத் தெரிவித்தான். இவ்வாறு

சிற்றன்னைக்குப் பிறந்த பிள்ளைதான் ராஜா ரிசாலு. அப்பிள்ளையைப் பிறந்தவுடனே அது ராஜா கண்ணில் படாமலிருப்பதற்காக, குதிரைக் கொட்டகையில் ஒளித்து வைத்து, அதே சமயத்தில் பிறந்த ஒரு குதிரைக் குட்டியுடன் சேர்த்து வளர்த்தார்கள்.

ரிசாலுவுக்குப் பதினொரு வயதாகி யிருக்கும்போது, அவன் அக் கொட்டகையிலிருந்து தப்பி வெளியேறிவிட்டான். அவன் ஒரு கிராமக் கிணற்றங்கரைக்குச் சென்று அங்கே தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த பெண்களின் மண் குடங்களை உடைத்துவிட்டான். பெண்கள் எல்லோரும் அரசனிடம் முறையிட்டார்கள். அரசனே ரிசாலுவைத் தண்டிப்பதற்குப் பதிலாக, அப் பெண்களுக்குச் செப்புக் குடங்கள் வழங்கினான். அந்த உலோகக் குடங்களையும் ரிசாலு தன் அம்புகளால் ஓட்டையாக்கிவிட்டுத் தானே நேரில் தன் தந்தையைக் காணச் சென்றான். பூரண் பகத் கூறியிருந்த வார்த்தைகளை மறவாதிருந்த அரசன், தன் மகனை நேரில் பார்க்கத் துணியாமல் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். உடனே ரிசாலு தன் தந்தையின் அரண்மனையிலிருந்து வெளியேறி வேறு தேசங்களுக்குச் சென்று கீர்த்தியைத் தேடிக் கொள்ளப் புறப்பட்டான். அவனுடன் அவனது வெள்ளைக் குதிரையும் இரண்டு நண்பர்களும் இருந்தார்கள். அந்நண்பர்களில் ஒருவன் கருமான் மகன்; மற்றொருவன் தச்சன் மகன்.

அந்த மூன்று நண்பர்களும் வழியில் எத்தனையோ வன விலங்குகளையும், ராட்சஸர்களையும் சந்தித்துப் போராடவேண்டிவந்தது. ஒரு தடவை ரிசாலு தன் நண்பர்களிடமிருந்து பிரிந்து தனியாகிவிட்டான். அப்போது அவன் நிலா என்னும் நகரத்தை அடைந்தான். அங்கே அவன் ஒரு கிழவி வருந்தி அழுவதைக் கண்டான்;

அவ்வூருக்கு அருகிலிருந்த ஒரு ராட்சஸனுக்கும் ராட்சஸிக்கும் தினசரி ஒரு மனிதனையும், ஓர் எருமையையும், ஒரு பெரிய ரொட்டியையும் ஆகாரமாக அவ்வூர் ஜனங்கள் அளிக்கவேண்டுமென்றும், அன்று அக் கிழவியின் மகன் அவர்களுக்கு உணவாக அனுப்பப்படுகிறான் என்றும் கேள்விப்பட்டான். அக் கிழவியின் மகனுக்குப் பதிலாகத் தன்னை அனுப்பும்படி அவன் ஏற்பாடு செய்தான். ராட்சஸனை அவன் கொன்றுவிட்டான். ராட்சஸி பயந்து போய் ஒரு குகைக்குள் பதுங்கிவிட்டாள். ரிசாலு குகை வாசலில் தன்னைப் போல் ஒரு பதுமையைச் செய்து நிறுத்தி அவள் வெளி வரவொட்டாமல் வழியை அடைத்துவிட்டான்.

நிலாவிலிருந்து ரிசாலு ஹொண்டி நகருக்குச் சென்றான். அந்த நகரத்து ராணி ஒப்பற்ற அழகி. அவள் பெயரே ராணி சுந்தரம்தான். ராணி அரண்மனைக்கு எதிரே ஒரு யோகி உட்கார்ந்திருந்தான். அழகு மிக்க ராணியைப் பார்ப்பதற்காக அவன் அங்கே இருபத்திரண்டு வருஷமாகக் காத்திருந்தான். ரிசாலு அந்த யோகியின் சிஷ்யனானான். தன் குருவுக்காக அவன் தெருவிலும் சென்று பிச்சை வாங்கி வந்தான். அவன் பிச்சையெடுப்பதற்காகப் பாடி வரும்போது அவனுடைய இனிமையான குரலைக் கேட்ட ராணி தன் பணிப் பெண்களிடம் பக்ஷண பலகாரங்களையும் ஆபரணங்களையும் கொடுத்து அவனிடம் பரிசாக வழங்கும்படி அனுப்பினாள். அவனைப் பார்த்த அப்பெண்கள் அவன் அழகில் மயங்கி அங்கேயே நின்றுவிட்டார்கள். கடைசியாக ராணியே இறங்கி வந்தாள். ராணி கோபமுற்று ஏதேனும் தண்டித்துவிடுவாளோ என்று அஞ்சிய ரிசாலு ஓடிவிட்டான். "ரிசாலு யார்? அவன் எங்கே சென்றுவிட்டான்?" என்று ராணி யோகியிடம் ஆவலாக வினவினாள். ரிசாலு மீது ராணி

இவ்வளவு அன்பு காட்டியதைக் கண்டு பொறுமை யடைந்த யோகி, தான் ரிசாலுவைத் தின்றுவிட்டதாகப் பொய் சொன்னான். தன் மனத்தைக் கொள்ளை கொண்ட அந்த அழகன் இறந்துவிட்டதாக நம்பிய ராணி தீயில் குதித்து மாய்ந்தாள்.

எத்தனையோ வீரச் செயல்களை எல்லாம் செய்த ரிசாலு இறுதியாக, சீர்காப் என்னும் அரசனின் நகரத்தை அடைந்தான். சீர்காப் சூதாட்டத்தில் வல்லவன். அவனுடன் சூதாடி வெற்றி பெறுவதற்காகவே ரிசாலு அந் நகருக்கு வந்தான். ஊருக்கு வெளியே அவன், தலையில்லாத முண்டம் ஒன்று கிடப்பதைக் கண்டான். சரீரத்தை அவன் உயிர் பெற்றெழும்படிச் செய்தான். சீர்காப்பின் சகோதரன் தான் அவ்வாறு நரபலி கொடுக்கப்பட்டுக் கிடந்தான் என்று அவனுக்குத் தெரியவந்தது. சீர்காப்பைச் சூதாட்டத்தில் வெல்வதற்கு அந்தச் சகோதரன் ஒரு வழி சொல்லித் தந்தான். அந்த ஊர் சுடுகாட்டிலுள்ள எலும்புகளைக் கொண்டு பகடை பண்ணும்படி அவன் யோசனை கூறினான். அரசனின் மாயப் பகடையை மாய் எலும்புப் பகடை வென்றுவிடும் என்று அவன் தெரிவித்தான். ரிசாலு சீர்காப்பின் அரண்மனைக்குப் போகும் வழியில், காட்டுத் தீயில் சிக்கிய வெட்டுக்கிளி ஒன்றைக் காப்பாற்றினான். அந்த வெட்டுக்கிளி அவனுக்கு ஒரு மயிர் இழையைத் தந்தது. ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அந்த மயிர் இழையை எரிக்கும்படி அது அவனுக்கு யோசனை கூறியது. இன்னும் சிறிது தூரம் அவன் சென்றதும் சுண்ணும்புக் காளவாயில் விழுந்து மடியவிருந்த ஆறு பூனைக் குட்டிகளை அவன் தப்புவித்தான். அதற்கு நன்றியாகத் தாய்ப் பூனை அவனுக்கு ஒரு பூனைக் குட்டியைத் தந்தது.

சிர்காப் மன்னனின் அரண்மனை முற்றத்தில் ரிசாலு எழுபது அழகிய பெண்களைக் கண்டான். அவன் அவர்களுக்குப் பல மாய வித்தைகளைச் செய்து காட்டினாலன்றி அவர்கள் அவனை அரண்மனைக்கு உள்ளே விட மறுத்தார்கள். அவனும் பல வித்தைகளைச் செய்து காட்டினான். ஆனால் ஓர் அம்பாரம் தினையையும் ஓர் அம்பாரம் மணலையும் ஒன்றாக விரவி அவைகளைத் தனித்தனியே பிரிக்கும்படி கூறியபோது அவனால் அது முடியவில்லை. உடனே அவன் வெட்டுக்கிளி தந்த மயிரின் இழையை உபயோகித்து அந்தச் சோதனையில் வெற்றி பெற்றான். தாங்கள் எழுபது பேரும் ஒன்றாய் இருந்து ஆடுவதற்கு ஒரு பெரிய ஊஞ்சல் செய்து முடிக்கும்படி அவர்கள் கேட்டார்கள். அவனும் செய்து கொடுத்தான். ஆனால் எழுபது பேரும் ஏறி ஆடும் போது அவன் ஊஞ்சல் கயிற்றை அறுத்துவிட்டான். அவர்களில் ஒருத்தி தவிர மற்ற எல்லோரும் விழுந்து இறந்தார்கள். அந்த ஒருத்தி அவன் மீது காதல் கொண்டிருந்தாள்.

• அரண்மனை வாசலில் கட்டியிருந்த எழுபது மணிகளையும் அவன் ஓங்கியடித்துப் பெரும் ஓசை செய்து தன் வரவை அறிவித்தான். அவன் அடித்த வேகம் தாங்காமல் மணிகள் எல்லாம் நொறுங்கிவிட்டன. சிர்காப்பும் அவனும் சூதாட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே மன்னன், ரிசாலுவுக்கு விஷம் கொடுத்து அவனை மாய்க்கக் கருதினான். ரிசாலு சிர்காப்பின் நாய்க்கு அந்த விஷ உணவைக் கொடுத்துவிட்டுத் தான் தப்பிவிட்டான். முதல் ஆட்டத்தில் ரிசாலு தன் நாட்டைப் பணயமாக வைத்து இழந்துவிட்டான். அடுத்தபடியாக அவன் தன் உயிரைப் பணயமாக வைத்தான். ரிசாலுவின் வெள்ளைக் குதிரை செய்த எச்சரிக்கை மூலம் ரிசாலு சிர்காப்பின் சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டான். ஓர் எலி சிர்காப்பின் பகடையை

அவனுக்கு அனுகூலமான விதத்தில் உருட்டி விடுவதை அவன் கண்டுபிடித்துவிட்டான். ரிசாலுவின் பூனைக் குட்டி அந்த எலியை விரட்டியடித்து ரிசாலுவுக்கு உதவி செய்தது. ரிசாலு மயான எலும்புப் பகடையை உபயோகித்து வெற்றி பெற்றான். சீர்காப்புக்கு அவன் வாழ்நாளிலேயே அதுதான் முதல் தோல்வி.

அவ்வாறு அந்த அரசனுக்குத் தோல்வி ஏற்பட்ட சமயத்தில் அவனது மனைவி ஒருத்தி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதுதான் தன் தோல்விக்குக் காரணம் என்று கருதிய அரசன் அக் குழந்தையைக் கொன்றுவிட விரும்பினான். கனகம் என்ற பெயருள்ள அந்த ராஜகுமாரி (கனகம்-பொன்–கோதுமை–பாஞ்சால மொழி) கொல்லப்படுவதை ரிசாலு· தடுத்துவிட்டான். ரிசாலு மாங்கன்று ஒன்றை நட்டவுடன் அது பழம் தரும்படி செய்து காட்டினால், ராஜகுமாரி கனகத்துக்கே தன் ராஜ்ய உரிமையைத் தந்துவிடுவதாக அரசன் கூறினான். ரிசாலு அதே போல் செய்து காட்டி, பன்னிரண்டு வயதடைந்துவிட்டிருந்த கனகத்துக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். பிறகு ரிசாலு தன் ராஜ்யத்துக்குத் திரும்பிய போது அங்குள்ள மக்கள் அவனை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இதுதான் ரிசாலுவின் கதை. ஒவ்வொரு பிரிவு மக்களிடையிலும், வகுப்பாரிடையிலும் இதே கதை பல ரூபங்களில் வழங்கி வருகிறது. மாள்வா பிரதேச (பெரோஷ்பூர் வட்டார) மக்கள், ரிசாலு பொன் மயிருள்ள ராஜகுமாரி ஒருத்தியை மீட்டதாகக் கூறுவார்கள். சியல்தானில் அவள் ஒரு ராட்சஸனால் சிறை வைக்கப்பட்டிருந்ததாகவும் ரிசாலு அவளை மீட்டதாகவும் அவர்களின் கதை கூறுகிறது. மாள்வா மக்கள் இரண்டாயிரமாண்டுகளுக்கு

முன்பு சீய்ஸ்தானிலிருந்து அங்கே வந்ததாகவும், அவர்களின் அரசனை மோகாவின் பெயர்தான் இப்போது பாஞ்சாலத்தில் அந்தப் பெயருடன் விளங்குகிற ஊரின் பெயர் என்றும் அவர்கள் கூறுவதுண்டு. தோஆப் (ஜலந்தர்—ஹோஷியார்பூர்) மக்கள், ரிசாலு ஹிமாலய மலைகளுக்கும் மானசரோவர் ஏரிக்கும் போய் வந்ததாகக் கூறுவார்கள். மானசரோவரில் நல்முத்துக்களையே உணவாகக் கொண்டு வாழ்ந்த அன்னங்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ரிசாலு மானசரோவருக்குச் சென்முன் என்று அவர்களின் கதை கூறும். மாஜா (ரவி நதி தீரப் பகுதி) மக்கள், ரிசாலு ரிக் வேதத்தின் ஏழாவது மண்டலத்தில் கூறப்படுகிற பத்து அரசர்களின் போரில் பங்கெடுத்திருந்ததாகக் கூறுவார்கள். சில கதைகளில் ரிசாலு ஒரு மாயச் சிருவை அணிந்திருப்பானென்றும், அதனுல் அவன் யார் கண்ணிலும் படமாட்டான் என்றும் கூறப்பட்டிருக்கிறது. வேறு சில கதைகளில் அவன் மாய வஸ்திரம் தரித்திருப்பானென்றும், அது பட்டவுடன் எல்லாப் பொருள்களும் தங்க மயமாகிவிடுமென்றும் கூறப்படுகிறது. இன்னும் சில கதைகள், ரிசாலு ஓர் அக்ஷய பாத்திரம் வைத்திருந்தான் என்று கூறுகின்றன. ரிசாலுவிடம் சிங்கத்தின் பல் ஒன்று இருந்ததாகவும் அது பல வித்தைகளைச் செய்யும் சக்தி வாய்ந்தது என்று கூறுகிற பல கதைகளும் இருக்கின்றன.

ஆனுல், இந்தக் கதைகள் எல்லாவற்றிலும் ஒரு விஷயம் நன்ருய்த் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, ரிசாலு அபார பலம் வாய்ந்தவனுயிருந்தும் அவன் தன் பலத்தை ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யவே இல்லை. இன்று வரையில் அவன் பெயர் கருணைக்கும் வன்மைக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிவருகிறது.

பாஞ்சாலத்தில் பல நீதிக் கதைகளும் வழங்குகின்றன. உதாரணமாகப் பஞ்சதந்திரக் கதைகளைக் கூறலாம். அவைகளில் விலங்குகளும் ஜந்துக்களும்தான் பிரதான பாத்திரங்கள். இக் கதைகளில் எலிக் கதை ஒன்று இருக்கிறது. மழையில் நன்றாய் நனைந்துவிட்ட எலி ஒன்று குளிரிலிருந்து தப்புவதற்காக ஒரு வளை தோண்டியது. அங்கே உலர்ந்த வேர் ஒன்று இருந்தது. அது தீ எரிக்க உதவும் என்று அதை எலி வீட்டுக்கு எடுத்துச் சென்றது: வழியில் ஒருவன் ஈர விறகால் தீ மூட்ட முயல்வதைப் பார்த்துத் தன்னிடமிருந்த காய்ந்த சுள்ளியை அவனிடம் கொடுத்தது. அதற்குப் பதிலாக அவன் சிறிது ரொட்டியை எலிக்குக் கொடுத்தான். பிறகு எலி ஒரு குயவனைச் சந்தித்து ரொட்டியைக் கொடுத்து அவனிடமிருந்து ஒரு பானையைப் பெற்றது. பிறகு வழியில் ஒரு குடியானவன் எருமையைப் பால் கறந்துகொண்டிருந்தான். அவனிடம் பாத்திரம் இல்லாதபடியால் அவன் பாதரட்சையில் பால் கறந்துகொண்டிருந்தான். எலி தன்னிடமிருந்த பானையை அவனிடம் கொடுத்து அதற்குப் பதிலாக எருமையைப் பெற்றது. எலிக்குப் பேரம் பண்ணுவதில் தான் கெட்டிக்காரன் என்று அபார நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அடுத்தபடியாக கல்யாண கோஷ்டி ஒன்றை அது சந்தித்தது. மணமகளைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். அந்தக் கோஷ்டிக்கு அது தன் எருமையைத் தந்தது. பல்லக்குச் சுமந்தவர்கள் அந்த எருமையைத் தங்களுக்குத் தரும்படி கேட்டார்கள். எலி சொந்தக்காரன் பெயரைக் கூறி அவர்களைப் பயப்படுத்தியது. அவர்கள் ஓடிவிட்டார்கள். மணப் பெண் தனியே விடப்பட்டாள். அவள் எலியின் உடைமையாகிவிட்டாள். அவளை அது சந்தையில் விற்க முயன்றது. பெண்ணின் தாயார் அவளை வாங்கிக் கொண்டாள். அதற்கு ஈடாக, எலி ஒரு பழுக்கக்

காய்ந்த மணையில் உட்கார வைக்கப்பட்டது. அதன் வாலும் மயிரும் எரிந்து போகும்படி ஆகிவிட்டது; இதிலுள்ள நீதி என்ன என்பதை அவரவர் இஷ்டம் போல் யூகித்துக் கொள்ளலாம்.

### ராமனைக் காண வழி

மற்றொரு ரகக் கதையும் இருக்கிறது. ஒரு விவசாயி வட்டிக்குப் பணம் கடன் கொடுக்கும் வியாபாரியிடம், 'நீ எப்படிப் பணக்காரன் ஆனாய்' என்று கேட்டான். 'எல்லாம் பகவான் ராமன் தந்ததுதான்' என்று அவன் கூறினான். உடனே விவசாயியும் ராமனைத் தேடிப் புறப்பட்டான்; அவனிடம் மூன்று அப்பங்கள் இருந்தன. அவன் ஓர் அப்பத்தை ஒரு யோகியிடம் கொடுத்தான். மற்றொன்றை ஒரு பிராமணனிடம் கொடுத்தான். இருவரிடமும் ராமனைக் காண வழி எது என்று அவன் கேட்டான். ஆனால் இருவராலும் அவனுக்கு விடை கூற முடியவில்லை. 'நான்தான் ராமன்' என்று கூறிய மற்றொருவனிடம் அவன் மூன்றாவது அப்பத்தைக் கொடுத்தான்: அவன் விவசாயியிடம் ஒரு சங்கைக் கொடுத்து அவனுக்கு ஏதாவது வேண்டும்போது அதை ஊதும்படிச் சொன்னான். வட்டிக் கடைக்காரனுக்கு இந்தச் சங்கின் மகத்துவம் தெரிந்துவிட்டது. உடனே அவன் அந்தச் சங்கைத் திருடிக்கொண்டான். ஆனால் அதை ஊதத் தெரியாதபடியால் மீண்டும் விவசாயியிடம் ஒப்பித்துவிட்டு அதற்குப் பதிலாக ஒரு பேரம் பேசிக் கொண்டான். விவசாயிக்குக் கிடைக்கும் பொருளைப் போல் இரண்டு பங்கு பொருளைத் தனக்குத் தரவேண்டுமென்பது அவன் செய்த ஒப்பந்தம். விவசாயிக்குக் கோபம் வந்தது. உடனே அவன் தனக்கு ஒரு கண் குருடாக வேண்டுமென்று வேண்டினான். பேராசை

பிடித்த வட்டிக் கடைக்காரனுக்கு இரண்டு கண்ணும் போய்விட்டது.

### மதியுள்ள மனைவி

ஒரு கிராம நாவிதர் மனைவி மிகவும் புத்திசாலி. அந்த நாவிதர் தம் பொருள் அனைத்தையும் இழந்துவிட்டார். ராஜாவிடம் போய் உதவி பெற்று வரும்படி அவள் தன் கணவனை அனுப்பினாள். ராஜா அவருக்குத் தரிசு நிலத்தைத் தந்தான். தன் புருஷனை அந்நிலத்தில் பகல் முழுவதும் காவல் இருக்கும்படிக் கூறிவிட்டு, அவள் ஊர்முழுவதிலும் ஒரு வதந்தியைப் பரப்பினாள். அந்த நிலத்தில் புதையல் ஒன்று இருப்பதாகவும் அதை அவர்கள் தேடுவதாகவும் அவள் கூறினாள். இரவில் திருடர்கள் அந்நிலம் முழுவதையும் தோண்டி, புதையலைக் கண்டு பிடிக்க முயன்றார்கள். அவள் அவர்கள் உழுத வயலில் சாகுபடி செய்து நல்ல மகசூல் கிடைக்க வழி செய்துவிட்டாள். தானியத்தை விற்றுப் பொற்காசுகளைச் சேர்த்தாள். திருடர்கள் பணப் பெட்டியைத் திருட வந்தபோது, அவள் தன் புருஷனிடம் உரக்கக் கத்திப் பணப் பெட்டி வாசலுக்கடியில் இருப்பதாகக் கூறினாள். திருடர்கள் அங்கிருந்த பெட்டியை எடுத்துச் சென்று பார்த்தபோது அதில் சாணம்தான் இருந்தது. திருடர்கள் திரும்ப வந்ததும் அவள் தன் புருஷனிடம் பொற்காசுகள் வெளியே மரத்தில் ஒரு பையில் தொங்குவதாகக் கூறினாள். திருடர்கள் மரத்தில் தொங்கிய பையைப் போய்ப் பற்றி இழுத்தார்கள். அந்தப் பை வேறொன்றுமல்ல; ஒரு தேன்கூடு. அதிலிருந்த தேனீக்கள் அவர்களை நன்றாகக் கொட்டிவிட்டன. மீண்டும் திருடர்கள் அவள் வீட்டுக்கு வந்தபோது ஜன்னல் வழியாக ஒவ்வொருவராய் நுழைய முயன்ற திருடர்களின் மூக்குகளை அவள் அரிந்துவிட்டாள். திருடர்கள் அவளைத் தூங்கும்

போது தூக்கிச் சென்றுவிட்டார்கள். வழியில் கண் விழித்த அவள் ஆல மர விழுதுகளைப் பிடித்து மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். தான் ஒரு மர தேவதை போல் நடித்து அவர்களைப் பயப்படுத்தினுள். திருடர்கள் தாங்கள் கொள்ளை யடித்துக்கொண்டு வந்த பொருள் களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். பிறகு திருடர்கள் ராஜாவிடம் முறையிட்டார்கள். ஆனல் அந்த மதியூக மனைவி தன் வழக்கை நன்ருக எடுத்துரைத்து, சாட்சிய மாக திருடர்களின் மூக்குகளை ராஜாவிடம் காட்டினுள். ராஜா திருடர்களைத் தண்டித்து, அந்த மதியூக மனைவியின் புருஷனைத் தமக்கு மந்திரியாக்கினுர். 'இவ்வளவு புத்தி சாலியான மனைவி இருக்கும்போது அவன் ஒரு நாளும் தப்பு செய்ய மாட்டான்' என்று ராஜா கூறினுர்.

இக்கதைகளை வீடுகளிலும், சந்திகளிலும், மரத்தடியி லும் கேட்கலாம். கிராம ஜனங்கள் இக்கதைகளை ஆர்வத் தோடு கேட்டுப் பரம்பரை பரம்பரையாகக் காப்பாற்றி வருகிருர்கள்.

# பெனிசிலின்

எஸ். எஸ். ராமசாமி

**1943** ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி நியூயார்க் ஆஸ்பத்திரி யொன்றில் ஒரு சிறுமிக்கு ஜன்னி பிறந்து யமனுடன் போராடிக் கொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டது. அற்புத மருந்தான பெனிசிலின் கொடுக்கப் பட்டாலொழிய அக் குழந்தை 7 மணி நேரமே பிழைத் திருக்குமென்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.

அப்பொழுது யுத்தம் மும்முரமாக நடந்துகொண் டிருந்தது. குழந்தையின் தகப்பனுருக்கோ இம்மருந்தை எப்படிப் பெறுவதென்ற ஏக்கம் உண்டாயிற்று. ராணு வத்தினர்களுக்கின்றி, சிவில் பிரஜைகளுக்குப் பெனிசிலின் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. அப் பெண்ணின் தகப்பனுருக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. 'நியூயார்க்' பத்திரிகாசிரியரை அணுகி பெனிசிலின் கிடைக் கும்படி ஏற்பாடு செய்து, குழந்தையின் உயிரைக் காப் பாற்றிக் கொடுக்க வேண்டுமென்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார். உடனே பத்திரிகாசிரியர் சர்ஜன் ஜெனர லிடம் சென்று பெனிசிலினைக் கொடுத்துதவி இக் குழந்தை யின் உயிரைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார். பின்பு அவசர நிலைமையை உணர்ந்து, இம்மருந்தைப் பிரஜைகளின் உபயோகத்திற்கே விடுவிக்க அதிகாரம் பெற்ற டாக்டர் கிபெர் ஸ்கிப் லாபரட்டரியிலிருந்து இம் மருந்தைக் காரில் போலீஸ் பந்தோபஸ்துடன் கொண்டு

வர ஏற்பாடு செய்தார். பெனிசிலின் மருந்து ஆஸ்பத்திரி டாக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்குச் சுமார் 5½ மணி நேரம் பிடித்தது. உடனே அச்சிறுமிக்குப் பெனிசிலின் இஞ்செக்ஷன் அடிக்கடி செய்யப்பட்டது. ஜன்னியினால் பிதற்றிக்கொண்டிருந்த குழந்தையின் தேக நிலையில் 48 மணி நேரத்திற்குள்ளாக அதிசயிக்கத் தக்க மாறுதல் ஏற்பட்டது. இரத்தத்தில் நச்சு நீர்ப்பெருகி நீலம் பூத்திருந்த உடலின் நிறம் மாறி செந்நிறக் குருதியோட ஆரம்பித்தது. முகத்தில் தெளிவு காணப்பட்டது. ஆறு வாரங்களுக்கப்புறம் இக் குழந்தை முற்றிலும் குணமடைந்து வீடு போய்ச் சேர்ந்தது. பெற்றோர்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர்.

இது வாழ்க்கையை ஒட்டிய தனிப்பட்ட சம்பவம் என்றாலும் 'அற்புத மருந்து' பெனிசிலின் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணி வந்தது. முதலாவது யுத்தத்தின்போது குண்டுகள் பாய்ந்த இரணங்கள் ஆறாமல் சீழ் பிடித்துக் கிருமிகள் பெருகி ஆட்சேதம் அதிகம் ஏற்பட்டது. அந்தக் காலம் முதற்கொண்டே, சீழ் பிடித்துக் கோளாறுகள் தோன்றி மரணம் ஏற்படுவதைத் தடுக்கப் பல வைத்தியர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால் பல ஆண்டுகள் சென்ற பின் அலெக்ஸாண்டர் பிளெமிங் என்ற டாக்டரால்தான் இது கைகூடிற்று. அவர் இம்மருந்தை 1928 ஆம் ஆண்டிலேயே கண்டுபிடித்துவிட்டபோதிலும் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகி மூன்று வருஷங்கள் சென்ற பின் 1942 ஆம் ஆண்டில்தான் நோயாளிகளுக்குப் பயன் படும்படி தகுந்த அளவில் இது உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த அற்புத மருந்து எவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டது என்ற அவா வைத்தியர்களுக்கும் நம் போன்ற

சாதாரண ஜனங்களுக்கும் ஏற்படுவது நியாயமே. இதை ஓர் அதிருஷ்ட சம்பவம் என்று டாக்டர் பிளெமிங்கே குறிப்பிடுகிறுர். உயிரணுக்கள் ஆராய்ச்சியில் டாக்டர் பிளெமிங் ஈடுபட்டிருந்தார். இவற்றைப் பயிர் செய்ய (Culture) வைத்திருந்த ஆகாரக் கூடத் தட்டில் காற்றில் மிதந்து வந்த பூஞ்சணத்தின் (தாவர வகையைச் சேர்ந்த காளான்) ஸ்போர் ஒன்று சகல பந்தோபஸ்து ஏற்பாடுகளை எல்லாம் தாண்டி எவ்வாறே விழுந்த எதிர்பாராத நிகழ்ச்சியே பெனிசிலின் மருந்தைக் கண்டுபிடிக்க ஏது வாயிற்று. அது தட்டிலிருந்த உணவை உட்கொண்டு கொம்பும் கிளையும் விட்டு வளர ஆரம்பித்துவிட்டது. டாக்டர் பிளெமிங் ஸ்டபிலோகாக்கஸ் உயிரணுவைத் தான் ஆராய்ச்சிக்கு அத் தட்டில் பயிர் செய்திருந்தார். இந்த உயிரணுக்கள் வளருவதைத் தடைப்படுத்தி அதன் ஒரு பகுதியை வளரவிடாமல் இப் பூஞ்சணம் அழித்தும் இருந்தது. தமது ஆராய்ச்சிக்கு இடையூருக இருந்த இச் சம்பவத்தினுல் அவர் கோபமடைந்து இந்தத் தட்டிலுள்ள பொருள்களை எறிந்துவிட்டுப் புதிதாக மேலும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியிருக்கலாம். ஆனுல் அவர் இதைப் புறக்கணித்துவிடவில்லை. இத்தட்டில் ஸ்டபிலோகாக்கஸ் உயிரணுக்கள் கொல்லப்பட்டிருந்த விஷயம் அவரது ஆராய்ச்சி மனப்பான்மையையும், அதன் காரணத்தை அறியும் ஆவலையும் தூண்டியது. அவருக்குப் புதிய புதிய எண்ணங்கள் அலையலையாகத் தோன்றின. அதன்பின் பயிர்த் தட்டுக்களில் பல தடவை ஸ்டபிலோகாக்கஸ் உயிரணுக்களையும், இப் பூஞ்சணத்தையும் பயிரிட்டுக் கவனித்துவந்தார். இத் தட்டுக்களில் ஸ்டபிலோகாக்கஸ் வளராமல் தடைபடுவதைக் கண்ணுற்றுர். பூஞ்சணம் இல்லாமல் தனியாக ஸ்டபிலோகாக்கஸ் மட்டும் பயிர் செய்த தட்டுக்களில் அவை நன்கு செழித்து வளருவதைக்

கண்டார். இப்பூஞ்சணத்திற்கு டாக்டர் பிளெமிங் பெனி சிலியம் (Penicillium) என்று பெயரிட்டார். மேலும் ஆராய்ச்சி நடந்ததன் விளைவாக இதற்கு பெனிசிலியம் நோட்டேடம் (Penicillium Notatum) என்று பெய ரிடப்பட்டது.

இதன் ஆற்றல் மிகவும் அதிசயிக்கத் தக்கதாக இருந் தது. சில வகை உயிரணுக்களை அது வளர விடாமல் தடுத்து வந்தது. சில வகை உயிரணுக்களை அது அழிக்கும் சக்தியும், சில உயிரணுக்களைக் கரைத்து நிர்மூலமாக்கும் தன்மையும் பெற்றிருந்தது.

அது இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களுக்கு (leucocytes) தீமை விளைவிக்கக் கூடியதா என்றும், மிருகங்களுக்கு விஷமூட்டும் தன்மையுள்ளதா என்றும் பல வகைகளில் ஆராயப்பட்டது. மற்ற அணுவுயிர்க் கொல்லி மருந்துகள் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக் களுக்குத் தீங்கு உண்டு பண்ணி வந்தன. பெனிசிலின் இவ் அணுக்களுக்கு யாதொரு கெடுதலும் விளைவிக்கவில்லை. பின்பு வெள்ளைச் சுண்டெலிகளுக்கும் முயல்களுக்கும் பெனிசிலின் இஞ்செக்ஷன் செய்து பரிசோதனை நடை பெற்றது. அதற்கு நச்சுக் குணம் இல்லாமலிருந்தது.

20,000 துளி சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரில் ஒரு துளி பெனிசிலின் அதன் ஆற்றலை இழக்கவில்லை என்பதை டாக்டர் பிளெமிங் கண்டுபிடித்தார். நிமோனியா, டிப் திரியா, கானரியா நோய்களை விளைவிக்கும் உயிரணுக்களை யும், ஸ்டபிலோகாக்கஸ், ஸ்ட்ரெப்டோகாக்கஸ் உயி ரணுக்களையும் கொன்றுவிடக் கூடிய ஆற்றல் பெனிசிலி னுக்கு இருந்தது என்பது தெரியவந்தது.

இதன்பின் ரெய்ஸ்டிரிக், ரீட்பெயின், பிளாரி போன்ற டாக்டர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். டாக்டர் பிளெமிங் எடுத்துக்கொண்ட முயற்சி முற்றுப்பெறுமலேயே இருந்து வந்தது.

1940 ஆம் ஆண்டு யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது; ஜெர்மன் படைகள் பிரிட்டிஷ் கால்வாயை அணுகிக் கொண்டிருந்தன. அவ்வமயம் உலகில் கிடைக்கக் கூடிய பெனிசிலின் எல்லாம் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையைச் சேர்ந்த சர் வில்லியம் டன் வைத்தியப் பள்ளியிலுள்ள குளிர்க்கலம் ஒன்றில் பாதுகாக்கப்பட்டு வந்தது. டாக்டர் பிளாரி இம்மருந்தை அதிக அளவில் உற்பத்தி செய்யவேண்டுமென்று மிகவும் முயற்சி எடுத்து வந்தார். ஆக்ஸ்போர்டு விஞ்ஞானிகள் பெனிசிலின் மருந்தை எவ்விதத்திலும் பாதுகாத்து வருவது என்று விரதம் பூண்டனர். ஜெர்மானியர் தங்கள் நாட்டில் கால் வைத்தால் தங்களுடைய சட்டைப்பை முதலியவற்றில் பெனிசிலின் மருந்தைப் பூசிக்கொண்டு பாதுகாத்து யாவரும் அறியாமல் நாட்டை விட்டு வெளியேறிவிடுவது என்றெல்லாம் திட்டமிட்டிருந்தனர். இச் சமயத்தில் யுத்தம் பரவாதிருந்த அமெரிக்காவுக்குச் சென்று 'அற்புத மருந்தை'க் காப்பாற்றுவது என்று முடிவு செய்தனர்.

ராக்பெல்லர் ஸ்தாபனம் ஏற்கெனவே இந்த ஆராய்ச்சிக்கு ஒரு சிறிது தொகையை ஒதுக்கியிருந்தது. என். ஜி. ஹீட்லியும் அமெரிக்கா செல்லும் விமானச் செலவையும் அந்த ஸ்தாபனம் ஏற்றுக்கொண்டது. அவர்கள் 1941 ஜூன் மாதக் கடைசியில் சிறிது பெனிசிலின் பூஞ்சணத்துடன் லிஸ்பனிலிருந்து நியூயார்க் புறப்பட்டனர். ஜூலை 2-ந்தேதி அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தனர். உடனே விவசாய இலாகா ஆராய்ச்சிப் பிரிவைச்

சேர்ந்த டாக்டர் ஆர். டி. காகில் (R. D. Coghill) என்பவருடன் தொடர்பு கொண்டனர். டாக்டர் காகில் பெனிசிலின் உற்பத்திக்குப் பெரிதும் உதவியளித்தார். முதன் முதலாக 1945 ஆம் ஆண்டில் இம் மருந்து அமெரிக்காவில் ஒரு ஸ்திரீக்கு செலுத்தப்பட்டு அவள் பிழைத்தாள். இவ்வாறு நோயாளி குணமடைந்ததைக் கண்ட அமெரிக்கருக்கு ஊக்கம் பிறந்தது. பலர் இம் மருந்தை உற்பத்தி செய்ய முன் வந்தனர். இப்பொழுது இல்லினுய் நதி தீரத்திலுள்ள பியோரியா (Peoria) என்ற நகரில் நவீன முறையில் இம் மருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

பிரிட்டனில் விநியோக இலாகா மந்திரி சர் ஆண்ட்ரூ டங்கனே (Sir Andrew Duncan) டாக்டர் பிளெமிங் சந்தித்துப் பெனிசிலின் உற்பத்தியை ஆரம்பிக்கக் கேட்டுக் கொண்டார். இதன் விளைவாக விஞ்ஞானிகளும், உற்பத்தியாளரும் அடங்கிய மகாநாடு நடைபெற்றது; பெனிசிலின் உற்பத்திக் குழுவொன்று அமைக்கப்பட்டது. அதன் முதல் கூட்டம் 25–9–42 இல் நடைபெற்றது. இதன் மூலம் பிரிட்டனில் பெனிசிலின் உற்பத்தி சாத்தியமாயிற்று. உடனே அமெரிக்க உற்பத்தியாளருடன் தொடர்பு கொண்டு பெனிசிலின் உற்பத்திக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. பெனிசிலின் ஆராய்ச்சியில் ஈடுபட்டு சிறந்த சேவை செய்த டாக்டர் பிளோரி, செயின், பிளெமிங் ஆகியோருக்கு 1945-ஆம் வருஷத்தில் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன.

### பெனிசிலின் உற்பத்தி

கீழ்க்காணும் வகையில் பெனிசிலினை உற்பத்தி செய்யலாம். (1) கலவை நீரில் மேலெழுந்தவாருகப் பயிரிடும் முறை (Surface Culture Method) புட்டிகளில் அல்லது

கொள்கலனில் கலவை நீரை விட்டுப் பெனிசிலின் நோட்டேட்டத்தைப் பயிர் செய்கிறார்கள். பின்பு சுத்திகரிக்கப் பட்ட பிராணவாயு செலுத்தப்படுகிறது. 22 டிகிரி சென்டிகிரேட் அல்லது 25 டிகிரி சென்டிகிரேட் தட்ப நிலையில் அது பயிர் செய்யப்படுகிறது.

24 மணி நேரத்தில் கொள்கலனில் வெண்மையான பஞ்சு போன்ற பெனிசிலியம் தோன்றுகிறது. ஒரு வாரத்தில் இருண்ட பச்சையாகிறது; பின்பு மங்கலாகிச் சாம்பல் நிறமாகிறது. அதன் பிறகு மஞ்சள் நிறமாகிறது. சாதாரணமாக 7–வது தினத்தன்று பூர்ண வளர்ச்சியடைகிறது. பிறகு பயிரான பூஞ்சண நீரிலிருந்து பெனிசிலினை வடிகட்டிச் சேமித்துப் பாதுகாக்கிறார்கள்.

(2) பெரிய பீப்பாய்களிலும் அல்லது தொட்டிகளிலும் உணவு நீரில் பெனிசிலியத்தைப் பயிர்செய்யும் முறை மற்றொன்று. (Submerged Culture Method)5000 முதல் 10000 காலன்வரை பிடிக்கக்கூடிய தொட்டி உபயோகிக்கப்படுகிறது. இவ்வுணவு நீரில் மேற்பரப்பில் வளர்வதைத் தடுத்து நன்கு காற்று செலுத்தப்படுகிறது. இவ்வுணவு நீரில் பெனிலின் சிறுசிறு திரள்களாக (Small pellets) உண்டாகிறது. கன சென்டிமீட்டருக்கு 80 யூனிட்டுகள் வீதம் பெனிசிலின் கிடைக்கின்றன. இம் முறைப்படி பெருத்த அளவில் பெனிசிலினை உற்பத்தி செய்ய முடியும்.

(3) மூன்றாவது தவிட்டு முறை (Bran Method) தட்டுகளில் அல்லது பீப்பாய்களில் உள்ள ஈரப்பதமுள்ள தவிட்டில் பெனிசிலின் நோட்டேட்டம் உற்பத்தி செய்யப் படுகிறது. ஆனால் இம்முறையில் பயிரிடும்போது வேறு நுண்ணிய பொருள்கள் கலந்து விட்டால் பெனிசிலின் வெகுவாக சேதமடையக் கூடும். இம்முறை மிகக் கஷ்டமானது.

பெனிசிலின் சேகரிக்கப்பட்ட பின் சுத்திகரிக்கப்படுகிறது. கரைப்பானிலிருந்து (Solvent) கரைப்பானுக்கு மாற்றப்பட்டு விசேஷ முறையில் அதன் ஆற்றல் மதிப்பிடப்படுகிறது. பின்பு பெனிசிலின் தனி கொள்கலன்களில் நிரப்பப்படுகிறது. அதன் பிறகு சிறிய கண்ணாடிப் புட்டிகளில் அடைக்கப்படுகிறது.

கடைசியாக இப்புட்டிகளிலுள்ள பெனிசிலின் திரவம் உலர்த்தப்படுகிறது. ஆனால் இவ்வாறு உலர்த்தப்படும் போது உஷ்ண நிலை அதிகரிக்காமல் இருக்க வேண்டும். 'இது உறையும் முறையில் உலர்த்தல்' (Freeze-drying) என்று கூறப்படுகிறது. அதாவது பெனிசிலின் கரைசலில் உள்ள தண்ணீரைப் பனிக் கட்டியாக உறையும்படி செய்கிறார்கள். பின்பு சூன்ய நிலையில் (Vacuum) பனிக்கட்டியாக உறைந்த கரைசலில் உள்ள தண்ணீர் திரவ ரூபத்தில் மாருதபடியே விசேஷ முறையில் ஆவியாக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. இம்முறைக்காக உபயோகப்படுத்தப்படும் கருவிகளும் இயந்திரங்களும் மிகவும் சிக்கலானவை. அதன்பின் பவுடர் பெனிசிலின் கிருமிகள் புகா வண்ணம் பாதுகாக்கப்பட்டு புட்டிகளில் அடைக்கப்பட்டு அவற்றின் மீது லேபில்கள் ஒட்டப்பட்டு மார்க்கெட்டில் விற்பனைக்கு வருகிறது.

இப்பொழுது வர்த்தக முறையில் தயாரிக்கப்படும் பெனிசிலின் 80 சத வீதம் முதல் 90 சதவீதம் வரை சுத்தமுள்ளதாயிருக்கும். பெனிசிலினைப் பொதுவாகத் தட்ப நிலையிலுள்ள உலர்ந்த இடத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். விற்பனைக்கு வரும் பெனிசிலின் புட்டிகளில் பொதுவாக அதை உபயோகப்படுத்தக்கூடிய காலவரை (Expiry date) குறிப்பிடப்படுகிறது. அக்காலத்திற்குள் அதை உபயோகிக்கலாம்.

1943 ஆம் ஆண்டில் பெனிசிலின் உற்பத்திக்காக அமெரிக்காவில் சுமார் 50 லட்சம் பவுன் செலவிடப் பட்டது. அதே வருஷம் ஜூன் மாதத்தில் சுமார் 40 கோடி யூனிட்டுகள் பெனிசிலின் உற்பத்தியாயிற்று. பின்பு உற்பத்தி இருமடங்காகியது. ஜூலை மாதத்தில் மேலும் உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரித்தது. டிசம்பர் மாதத்தில் 100 கோடி யூனிட்டுகள் ஆயிற்று. 1945 ஆம் வருஷத்தில் இது 5000 கோடி யூனிட்டுகளாக உயர்ந்தது. இவ்வாறு உற்பத்தி பெருகிக்கொண்டேவந்தது.

பிரிட்டனில் 1943 ஆம் ஆண்டில் 30 கோடி யூனிட்டு பெனிசிலின் உற்பத்தி செய்யப்பட்டது. அடுத்த வருஷத்தில் உற்பத்தி 316 கோடி யூனிட்டுகளாக ஆயிற்று. 1945 ஆம் வருஷத்தில் 2600 கோடி யூனிட்டுகள் என்று மதிப்பிடப்பட்டது.

## பெனிசிலின் மருந்தின் உபயோகம்

காயங்கள் பட்டுச் சீழ்பிடித்தால் உடலில் உள்ள இரத்தம் பாதிக்கப்பட்டு விஷத் தன்மை அதிகரிக்கலாம். யுத்தங்களில் பெரும்பாலோருக்கு ஏற்பட்ட புண்கள் இத்தகைய ஆபத்தை விளைவிக்கக் கூடியன. இதற்குப் பெனிசிலின் அற்புத மருந்து மிகவும் பயன்படக்கூடியது. சீழ் விளைவிக்கும் உயிரணுக்கள் சல்பா மருந்துகளுக்கு வசமானாலும், 10 முதல் 15 சதவீத நோயாளிகளே இம் மருந்துகளினால் பிழைத்தனர். ஆனால் பெனிசிலினை உபயோகித்துப் பார்த்ததில் 80 சதவீதம் நோயாளிகள் குணமடைந்திருப்பதாகத் தெரியவந்தது.

மெனிஞ்சைட்டிஸ் என்னும் மூளைக் காய்ச்சலைக் குணப்படுத்தும் ஆற்றல் இம் மருந்துக்கு உண்டு. மெனிஞ்சோ காக்கஸ் என்னும் ஒருவகை உயிரணுக்களால் இந்நோய் ஏற்படுகிறது. இந் நோய்க்கு ஆரம்பத்தில்

சிகிச்சை செய்ய வகை தெரியாமல் வைத்தியர்கள் திகைத்தனர். நோய்கண்டவர்களில் அநேகமாக 70 சத வீதம் இறந்துவிடுவார்கள். ஆனால் பெனிசிலின் புகுத்திய பின் மரணவிகிதம் அதிசயிக்கத் தக்கவகையில் குறைந்து விட்டது. சில வைத்தியர்கள் நூற்றுக்கு நூறு சிகிச்சைகளில் வெற்றியைக் கண்டிருக்கிறார்கள்.

மண்டைக்குச் செய்யும் சஸ்திர வைத்தியம் வெற்றியடைவதற்குப் பெனிசிலின் மிகவும் உதவுகிறது. மண்டையில் பலத்த காயமடைபவர்களுக்கும் இம்மருந்து ஒரு வரப் பிரசாதமாகும்.

நெஞ்சு நோய்களுக்கும் பெனிசிலின் சிகிச்சை முக்கியமானது. தொண்டை வழியாக உயிரணுக்கள் சுவாச கோசங்களுக்குள் புகுந்து கப ஜுரம் அல்லது நிமோனியா போன்ற நோய்கள் தோன்றலாம். இந் நோய் நியுமோகாக்கஸ் என்ற உயிரணுக்களால் ஏற்படுகிறது. அதைக் குணப்படுத்த சல்பா மருந்தை விட பெனிசிலின் பெரிதும் பயன்படுகிறது.

எலும்பு முறிவினால் ஏற்படும் உள்காயங்களுக்குச் சிகிச்சை செய்யப்படும் போது சில சமயங்களில் உயிரணுக்கள் புகுந்து குணம் ஏற்படாமல் பல கோளாறுகளை விளைவிக்கும். இதைத் தவிர்க்கவும் பெனிசிலின் மருந்து பயன்படுகிறது.

நாசி, செவிகளில் உண்டாகும் நோய்களுக்குப் பெனிசிலினை வைத்தியர்கள் இஞ்செஷன் செய்து குணப்படுத்தி வருகிறார்கள். நாசி, செவி, தொண்டை ஆகிய உறுப்புகளிடையே நெருங்கிய தொடர்பு உண்டென்பதை நாம் நன்கு அறிவோம். ஜலதோஷத்தினால் பல கோளாறுகள் ஏற்படலாம். இவற்றைத் தடுத்து குணப்படுத்துவதில் பென்சிலின் மருந்து சிறந்தது.

வாய், பல், ஈறு முதலிய உறுப்புக்களில் தோன்றும் நோய்களுக்கும் பெனிசிலின் உபயோகித்துக் குணப்படுத்தி வருகிறார்கள்.

மிகவும் பயங்கரமான காமவிகாரத் தொத்து நோய்களுக்குப் பெனிசிலினைச் சிறந்த சஞ்சீவி என்றே கூறலாம். சிபிலிஸ், கானரியா, முதலிய நோய்களைத் தோற்றுவிக்கும் உயிரணுக்களைப் பெனிசிலின் மருந்து எளிதில் தாக்கிக் குணப்படுத்தும் அபூர்வ ஆற்றல் பல வைத்தியர்களைத் திகைக்கச் செய்திருக்கிறது.

கண்நோய்கள், ஸ்டபிலோகாக்கஸ், ஸ்ட்ரப்டோகாக்கஸ், நியூமோகாக்கஸ், காஞேகாக்கஸ் முதலிய உயிர் அணுக்களால் ஏற்படுகின்றன. காஞேகாக்கஸினுல் தோன்றும் நோய் மிகவும் ஆபத்தானது; கண்பார்வையே போய் விடும். பெனிசிலின் கண்ணேய்களுக்கு வரப்பிரசாதமாகவே இருந்து வருகிறது.

இப்பொழுது பலவகை பெனிசிலின் மருந்துகள் உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றன. முக்கியமாகப் பெனிசிலின் பவுடரைக் கூறலாம். இதுதான் இஞ்செக்ஷனுக்குப் பயன்படுகிறது. கிரீம்கள், களிம்புகள், கண்ணுக்குத் தனி மருந்து, மிட்டாய்கள், மோந்து பார்க்க மூக்குப்பெடி போன்ற மருந்து, பல்லைப் பிடுங்கிய பின் சீழ்பிடிக்காமல் உபயோகிக்கும் மருந்து (Dental cones) முதலியன தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பெனிசிலின் சிறந்த சஞ்சீவியாக விளங்குகிறது. ஆனல் 'சகல ரோக நிவாரணி' என்று நாம் அதை நினைத்து விடக்கூடாது. இம் மருந்துக்கு வசமாகாத நோய்கள் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக வைரஸ் விளைவிக்கும் அம்மை, மற்றும் க்ஷயரோகம் போன்ற நோய்களைக் கூறலாம்.

# டாக்டர் சுகர்ணே

டாக்டர் சுகர்ணே 1945 ஆகஸ்ட் 18-ந் தேதியன்று இந்தொனேஷ்யக் குடியரசின் முதல் தலைவராகத் தேசியக் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைமை தாங்கும் திறமையும், கம்பீரமான தோற்றமும், பேச்சுவன்மையும், பொதுஜனங்களின் பேராதரவும் பெற்று, இந்தொனேஷ்யாவின் தலைசிறந்த பிரஜையாக விளங்கிய டாக்டர் சுகர்ணே இந்தொனேஷ்யக் குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஆச்சரியமேயில்லை. அவர் பதவி யேற்ற தினத்தன்று இந்தொனேஷ்யாவின் சுதந்திரப் பிரகடனத்தைக் கேட்பதற்காகக் கூடியிருந்த மாபெரும் ஜனத் திரளை இந்தொனேஷ்யாவில் அதற்கு முன் ஒருபோதும் கண்டதில்லை. சுதந்திரப் பிரகடனத்தை அவர் வாசித்த போது, அங்கு கூடியிருந்த மக்கள், தலைவரிடத்தில் தாங்கள் கொண்டிருந்த அன்பிற்கு அறிகுறியாகச் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அவர் பேசி முடித்த பிறகு, இந்தொனேஷ்ய மக்கள் இந்தொனேஷ்யக் குடியரசுக்கும், குடியரசின் தலைவருக்கும் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, குடியரசையும் குடியரசின் தலைவரையும் பாதுகாக்கத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருப்பதாக உறுதி கூறினர்.

சுகர்ணேவின் வாழ்க்கையின் முற்பகுதி பரிதவிக்கத் தக்க சம்பவங்களும், துன்பமும், இடையூறுகளும் நிறைந்ததாகவே இருந்தது; அவர் கடைப்பிடித்து வந்த அரசியல் கொள்கைகள் காரணமாக அவர் பல ஆண்டுகளைச் சிறைச்

சாலைகளிலோ, நாடு கடத்தப்பட்டோ கழிக்க வேண்டி யிருந்தது. தமது லட்சியத்தை—இந்தோனேஷ்ய மக்களின் சுதந்திரத்தை—அடைவதற்கு எதையும் தியாகம் செய்ய அவர் சித்தமாக இருந்தார்.

டாக்டர் சுகர்ணோ, 1901 ஜூன் 6-ந் தேதி பிறந்தார். அவரது தந்தை ஜாவாவைச் சேர்ந்தவர்; அவர் ஒரு பள்ளி ஆசிரியராக வேலை பார்த்துவந்தார். சுகர்ணோவின் தாயார் பாலித்திவைச் சேர்ந்தவர். சுகர்ணோ பாண்டுங்கில் தொழில் நுட்ப சர்வகலாசாலையில் சேர்ந்துப் படித்துப் பட்டம் பெற்றவர். சித்திரக் கலையில் இவருக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. கல்லூரியிலிருந்து வெளி வந்த உடனேயே அரசியலில் ஈடுபடாமலிருந்திருந்தால், அவருடைய தொழிலிலே வெகுதூரம் முன்னேறியிருப்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இப்போதுங்கூட அவர் ஒரு சிறந்த கலைஞராகவே விளங்குகிறார். நேர்த்தியான பல ஓவியங் களை அவர் சேகரித்து வைத்திருக்கிறார்; ஐரோப்பாவிலும், இந்தோனேஷ்யாவிலும் தயாரிக்கப்பட்ட கலைச்சிறப்புற்ற பல பொருள்கள் அவரிடமுள்ளன.

டாக்டர் சுகர்ணோ இளைஞராயிருக்கும்போதே நல்ல பேச்சாளி என்று பெயரெடுத்தவர். டச்சுக்காரர்கள் அடக்குமுறையைக் கையாண்டு வந்த நாட்களில் டாக்டர் சுகர்ணோவின் வன்மையான பேச்சுக்கள் இந்தோனேஷ்ய மக்களுக்கு வரும்பொருள் உரைக்கும் அசரீரிக் குர லாகவும், அவருடைய கம்பீரமான தோற்றம் மக்களின் உணர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாகவும் இருந்துவந்தன. அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுபடுவதற்காக இந்தோ னேஷ்ய மக்கள் நடத்திவந்த போராட்டத்திலே சுகர்ணோ வின் சொந்த அபிலாஷைகள் தலைதூக்கவே இல்லை. இருபத்தாறுவது வயதில் டாக்டர் சுகர்ணோ இந்தோ னேஷ்ய தேசியக் கட்சியை அமைத்து, அதன் தலைவராக

ஆனர். அந்தக் கட்சியானது ஒத்துழையாமைக் கொள்கையை அனுசரிப்பதன் மூலம் இந்தொனேஷ்யாவின் விடுதலைக்காக, முற்றிலும் தன்னுடைய சொந்த பலத்தை நம்பியே போராடி வந்தது. அப்போதுதான் டச்சு அதிகாரிகள், நாடு முழுவதிலும் சமத்துவக் கொள்கையைப் பரப்பி வந்ததற்காக முப்பதாயிரம் இந்தொனேஷ்யர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர்களில் சுமார் ஆயிரத்து நானூறு பேர் நாடு கடத்தப்பட்டு, நியூகினியில் அரசியல் காவல் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர்.

அந்தச் சம்பவம் நிகழ்ந்து ஒரு வருஷத்துக்குள்ளாகவே, டாக்டர் சுகர்னேவின் எதிர்ப்பைச் சமாளிப்பது கடினம் என்பதை டச்சுக்காரர்கள் உணர ஆரம்பித்துவிட்டனர். டச்சுக்காரர்களால் அனுமதிக்கப்பட்டிருந்தவை தவிர, வேறெந்த விதமான அரசியல் கொள்கைகளையும் போதிப்பவர்கள் கைது செய்து காவலில் வைக்கப்படுவார்கள் என்றும், நாடு கடத்தப்படுவார்கள் என்றும் டச்சுக்காரர்கள் பலதடவை பயமுறுத்தியிருந்ததையும் பொருட்படுத்தாமல், டாக்டர் சுகர்னே மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், டச்சுக்காரர்களின் எதேச்சாதிகாரக் கொடுங்கோல் ஆட்சியை ஒழிப்பதற்கு இந்தொனேஷ்ய மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்; இந்தொனேஷ்யரின் துன்பங்களுக்குக்கெல்லாம் டச்சுக்காரரின் காலனி ஆட்சிமுறைதான் மூலகாரணமென்று கூறினர். இந்தொனேஷ்யா, இந்தொனேஷ்ய மக்களாலேயே ஆளப்படவேண்டுமென்றும், அப்போதுதான் அவர்கள் வறுமையினின்றும் விடுபட்டு, உயர்தரமான வாழ்க்கை நடத்த முடியும் என்றும் அவர் சொன்னர். இந்தொனேஷ்ய சுதந்திரத்தின் வழிகாட்டி என்று மக்கள் அவரைப் பாராட்டினர். டச்சுக்காரர்கள் அவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தனர்.

அவர் ஏற்படுத்தியிருந்த தேசீயக் கட்சியும் கலைக்கப்பட்டு விட்டது.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு டாக்டர் சுகர்னோ விடுதலை செய்யப்பட்டார்; ஆனால், சிறைவாசத்தால் அவருடைய அபிலாஷையோ, பேச்சு வன்மையோ சிறிது கூடக் குறையவில்லை. மீண்டும் பொதுக்கூட்டங்களில் பேசி டச்சு ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்ட ஆரம்பித்தார். 1933 ஆகஸ்டில் டாக்டர் சுகர்னோ மீண்டும் கைது செய்யப்பட்டு, ஒன்பது மாதம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பிறகு, நாடு கடத்தப்பட்டு, பிளோரெஸ் தீவிலும் பிறகு பென்கோலெனிலும் மலேரியா பரவியிருந்த சிறைமுகாம்களில் காவலில் வைக்கப்பெற்றார்.

டாக்டர் சுகர்னோவின் அரசியல் வாழ்க்கையின் முதல் கட்டம் இவ்வாறாக முடிவுற்றது. அடுத்த ஒன்பது ஆண்டுகளையும் அவர் வெளிநாட்டுச் சிறைக்கூடங்களில் கழித்து வந்தார். இந்தொனேஷ்யா மீது ஜப்பானியர் படையெடுத்ததும் டச்சு ஆட்சி ஒழிந்தது. சுகர்னோவும் விடுதலை பெற்றார்.

இன்று, டாக்டர் சுகர்னோ இந்தொனேஷ்யாவில் மிகுந்த அதிகாரம் பெற்று, குடியரசின் முதல் பிரஜையாக விளங்கிவருகிறார்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18.

தி

# நியூ கார்டியன் ஆப் இந்தியா

# லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமைக்காரியாலயம்: சென்னை.

(ஸ்தாபிதம்: 1934)

அமுலிலுள்ள வியாபாரம்

## மூன்றேகால் கோடிக்குமேல்

சிறந்த மதிப்பீடு முடிவுகள்

மிகச் சிக்கனமான முறையில் 31-12-53 முடிவான மூன்று வருஷத்துக்குக் கணக்கிடப்பெற்ற மதிப்பீடு

பாலிஸிதார்களுக்கு அளிக்கப்பெற்ற போனஸ்

வருஷம் ஒன்றுக்கு ரூ. 1000-க்கு லாபத்துடன் கூடிய ஆயுள் பாலிஸிகளுக்கு ரூ. 12

வருஷம் ஒன்றுக்கு ரூ. 1000-க்கு லாபத்துடன் கூடிய எண்டோமெண்ட் பாலிஸிகளுக்கு ரூ. 10

இந்தத் திருப்திகரமான முடிவுகள், ஆயுள் இன்ஷூரன்ஸுக்கு நபர்களைப் பொறுக்குவதிலும், ஜாக்கிரதையாக முதலீடு செய்வதிலும், சிக்கனமான நிர்வாகத்திலும் கம்பெனிக்குள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகின்றன.

இந்தக் கம்பெனியில் ஒரு பாலிஸி எடுத்துக் கொள்வது ஒரு சிறந்த ஆஸ்தி; ஏஜன்ஸி எடுத்துக் கொள்வது ஒரு மதிப்புயர்வான வியாபாரத் தொடர்பாகும்.

## தி நியூ கார்டியன் ஆப் இந்தியா

## லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமைக்காரியாலயம்: யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ்

எஸ்பிளனேட்—சென்னை 1

குமரி மலர் வெளியீடு

# புதிய பிரயாண நூல்

●

இனிய தமிழ் – எளிய நடை – ருசிகரமான
பிரயாண அநுபவங்கள்

●

'உலகம் சுற்றும் தமிழன்'

ஏ. கே. செட்டியார்

அவர்கள்

நாற்பது மாதங்கள் மலேயா, சிங்கப்பூர், இந்தோனேஷ்யா, பீஜித்திவுகள், ஆஸ்திரேலியா, பர்மா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, தென்னமெரிக்கா, டச்சு-பிரிட்டிஷ் கயானக்கள், இங்கிலாந்து, ஜர்மனி, நார்வே, டென்மார்க்கு முதலிய நாடுகளில் பிரயாணம் செய்து, கண்டதும் கேட்டதும் இதர அநுபவங்களும் கொண்ட புதிய பிரயாண நூல்

விரைவில் வெளிவரும்